# திராவிடநாடு



# ஊர்வலம்

—[ஞானக்கண்]—

"வரிவிதிக்குமாறு உத்தரவு வேறு வந்திருக்கிறதாமே! என்ன செய்யப் போகிறீர்கள்?" என்று நிதியமைச்சர் சுப்ரமணியத்தைப் பார்த்துக் கேட்டேன். நிமிர்ந்து என்னைப்பார்த்தஅவர் முகத்தில், அவ்வளவு கடுகடுப்பில்லை.

"என்ன செய்வது?" என்று கூறிக் கொண்டே எதிரேயிருந்த பைல்களைப் பார்ப்பதும், எதையெதையோ குறித்துக் கொள்வதுமாக இருந்தார்.

"அப்படியானல், நிச்சயம் நீங்களும் புதுவரிகளைப் போடலாம் என்று எதிர்பார்க்கலாம், அல்லவா?" என்றேன்.

மீண்டும் என்னைச் சோகமாகப் பார்த்துவிட்டு, மும்முரமாக வேலையில் ஈடுபட்டார்! வருகிற 26-ந்தேதி சென்னை பட்ஜட்டை சட்டசபையில் சமர்ப்பிக்கவேண்டுமே!!

✱

அப்படியே சர்க்கார் காரியாலத்தைச் சுற்றிவரும்போது, எனக்குத் தெரிந்த அதிகாரி ஒருவர் தென்பட்டார்.

"என்னசார்! என்னமோ, மாதிரியிருக்கிறீர்கள்?"

"உத்யோகம் பார்த்துவிட்டு, ஒரு நாள் கழிந்ததா என்கிற பெருமூச்சுடன் வீட்டுக்கு கிளம்புகிறேன்"

"முன்பெல்லாம் சுறுசுறுப்பும் பரபரப்புமாய் இருப்பீர்களே! இப்போது ஏன் இப்படி?" என்றேன்.

"என்ன செய்வது!" என்ருர் மீண்டும் பெருமூச்சுடன்.

"சர்க்காரை நடத்திச் செல்ல வேண்டிய உயர்ந்த அதிகாரிகளான நீங்கள் எல்லாம் இப்படியிருப்பதால் தான் டி. டி. கே. அப்படிப்பேசியிருக்கிருர்" என்றேன்.

"எப்படிப் பேசியிருக்கிருர்?"

"முன்வந்து தாங்களே எந்தப் பொறுப்பையும் ஏற்க சர்க்கார் அதிகாரிகளாகிய நீங்கள் பயப்படுகிறீர்களாம்! இது, எவ்வளவு வேதனையாயிருக்கிறது, தெரியுமா என்று வருத்தப்பட்டுக்கொண்டிருக்கிருர். வெறும் மிஷினைப்போல, உத்திரவுகளில் கையெழுத்துப்போட்டுக்கொண்டிராமல், நாட்டு நலம் சம்பந்தமான பல யோசனைகளையும் திட்டங்களையும் சர்க்காருக்குச் சொல்லக்கூடாதா?" என்றேன்.

"சொல்லவேண்டியதுதான். ஆனல்..." என்று கூறிக்கொண்டே பையிலிருந்த 'இந்து' பத்திரிகையைப் பிரித்து என்னிடம் தந்தார். அதில், அதன் நிருபர், புது டில்லியிலிருந்து தீட்டியிருந்த பகுதியைப் படிக்கச் சொன்னர். நிருபர் எழுதுகிருர்:

"அதிகாரிகளுக்கு சர்க்கார் காரியாலயங்களில் என்ன மரியாதை கிடைக்கிறது? சில மந்திரிசபைகளைத் தவிர பெரும்பாலும் பல மந்திரிகள், அவர்களை, தமது வேலையாட்கள் போலவே நினைக்கின்றனர். அதிகாரிகளுடன், தாங்கள் எடுக்கப்போகும் நடவடிக்கை குறித்தோ, புதிய விஷயங்கள் குறித்தோ, வெளிப்படையாகவும் நல்ல முறையிலும் விவாதிப்பதே கிடையாது. வெள்ளைக்காரன் காலத்தில், அதிகாரிகள், சர்க்காரில் தங்களுடைய பங்கு பெரிதென உணர்ந்தார்கள். ஏனென்ருல், அதற்கான ஊக்கத்தை, வெள்ளையர்கள் அளித்தார்கள்! நல்ல முறையில் யோசனைகளை அதிகாரிகள் அளித்தால் அதை ஏற்றுக்கொள்ளும் பண்பும், பாராட்டும் குணமும், காணப்பட்டது. இது தவறு—இது கூடாது—என்று மனதில்பட்டதை எழுதும் சந்தர்ப்பமும் வளர்க்கப்பட்டது. ஆனல், இப்போது! எதற்கெடுத்தாலும் பயமும் சந்தேகமுமேயிருக்கிறது. மந்திரிகள், வைத்ததே சட்டம். அதிகாரிகள் தம் யோசனைக்கும் மூளைக்கும் எங்கே மதிப்பு தரப்படுகிறது?"

இப்படி எழுதியிருந்தார், நிருபர்! சோர்வுக்குக் காரணத்தைப் புரிந்து கொண்டுகிளம்பினேன்!!

✱

போலீஸ் இலாகாவின் பெரிய அதிகாரி ஒருவரைக் கண்டேன். "பாராட்டுகிறேன்! மிகவும் தீவிரமாக நீங்கள் எல்லாம் இப்போது நடவடிக்கை எடுப்பது பற்றி மகிழ்கிறேன். உதகமண்டலத்தில்கூட மாநாடு கூட்டிப் பேசினீர்களாம்" என்றேன்.

நான் இவ்வளவு பேசியும் அவர் ஒன்றும் பதில் கூறவில்லை! எனக்கு வேண்டாதவரல்ல—நண்பர்! ஆகவே

"என்னங்க! பேசாமலிருக்கிறீர்கள்?" என்றேன்.

"என்ன சார்! நாங்கள் எப்போதுதான் எங்கள் கடமையைச் செய்யாமலியிருக்கிறேம்? ஏதோ, இப்போது பக்தவத்சலம் போலீஸ் மந்திரியாக வந்திருக்கிருரல்லவா? அதனல், தலைகீழ் மாற்றம் நடப்பது போல ஒரு பரபரப்பு, உண்டுபண்ணப்படுகிறது! அது தவிர, நாங்கள் என்ன இத்தனை நாளும் குற்றவாளிகளைப்பிடிக்கவில்லையா...ஊம் என்ன செய்வது! ஒவ்வொருவர் வரும் போதும் ஒவ்வொரு ஆட்டம்போட வேண்டியிருக்கிறது, என்ருர்!!

"ஆமாம்! நமது மலபார் ஸ்பெஷல் போலீசை நாகநாட்டுக்கு அனுப்பியிருக்கிருர்களாமே?" என்றேன்.

"பாருங்கள்! இவர்கள்தான கிடைத்தார்கள், இதற்கு? பஞ்சாப் இல்லையா, பம்பாய் இல்லையா; ஒரிஸா மறுக்குமா, ஐக்கிய மாகாணம் ஏற்காதா. அவைகளையெல்லாம் விட்டுவிட்டு இங்கிருந்து மட்டும் அனுப்பியிருக்கிருர்கள்."

"அது நமக்குப் பெருமைதானே!"

"பெருமையா? நமது போலீசைக் காணும் நாகர்கள் என்ன நினைப்பார்கள். வீணுக நம்மவர்கள் மீது ஒரு துவேஷத்தையும் ஆத்திரத்தையும் தானே இது வளர்க்கும்! சரி, சரி, அதோ அந்த ஆள் வருகிருர்-பார்த்துவிடப் போகிருர்—நீங்கள் போங்கள்" என்று கூறிவிட்டு, பறந்தார். போலீஸ் மந்திரியின் அறையிலிருந்து கதருடை அணிந்த உருவம் ஒன்று வருவது தெரிந்தது! அதிகாரிகள் பாடு-இந்தக் காலத்தில், எவ்வளவு மோசமாகிவிட்டது என்று எண்ணிக்கொண்டு கிளம்பினேன் சென்னைக் கோட்டையை விட்டு!!

✱

ஒரு உருவம் பரபர வென்று கோட்டை கொடி மரத்தில் ஏறி, அங்கே பறந்துகொண்டிருக்கும், தேசியக் கொடியை இறக்கிக்கொண்டிருந்தது. அதைப் பார்த்த ஒரு காவல் அதிகாரி, ஓடி, கொடியை இறக்கியவரைப் பிடித்துக்கொண்டார்! "ஏனய்யா அப்படிச் செய்தாய்?". என்று கேட்டனர், அங்கிருந்தோர். கொடியை இறக்கிய அந்த நபரைப் பார்த்தபோது சித்த சுவாதீன மில்லாதவரைப்போலத் தெரிந்தார்; ஆனல், கொடியை இறக்கியதற்கு அவர் கூறிய பதில், என்னைச் சிந்திக்க வைத்தது. அவர் என்ன சொன்னர், தெரியுமா?

"ஏன்யா! பிரகாசம், எவ்வளவு பெரிய தலைவர், எத்தனை காலம் இந்தக் கோட்டையில் மந்திரியாகயிருந்தவர். அவர் மறைவுக்கு அனுதாபம் காட்டுவதற்காக ஏன் தேசியக் கொடியை பாதிக் கம்பம் வரையில் இறக்கவில்லை? அதனல்தான் நான் ஏறிச் செய்தேன்!"

போலீஸ் விடவில்லை, அவரை! பிடித்துக்கொண்டு போயிற்று!! ✦

...ர் 15]  ஆண்டு சந்தா ரூ. 8  [9-6-57]  தனிப் பிரதி 16-காசு  [இதழ் 47

# அந்த அச்சம்!

இங்குள்ள சிலர் என்னதான் கூறினாலும் சரி, எவ்வளவுதான் அலட்சியமாகக் கருதினாலும் சரி, கடந்த பொதுத் தேர்தலுக்குப் பிறகு நமது கழகம் பெற்றுவரும் வலிவும் ஆதரவும் சாதாரணமென்று நாம் கருதுவதற்கில்லை. புதுப்புதுக் கழகங்கள்! புத்தம் புதியமுகங்கள்! வயோதிகர்! வாலிபர்! தாய்மார்கள்! தம் இருள்போக்கவந்த உதய சூரியன் என்று எண்ணும் மாணவர்கள்! — எங்கு சென்றிடினும் நாம் காணும் காட்சியும், நமது கழகம் மக்கள் மன்றத்தில் பெற்றுவரும் மாட்சியும், உள்ளபடியே உணர்ச்சியையும் ஆர்வத்தையும் பன்மடங்காக்குகிறது.

ஒவ்வொரு இடத்திலிருந்தும்வரும் அன்பையும் ஆர்வத்தையும் காணும்போது, இந்த இடங்களுக்கெல்லாம் கழகத் தோழர்கள் இதுவரை செல்லாமலிருந்ததுதான் தவறே தவிர, நாட்டின் ஒவ்வொரு மூலை முடுக்கிலும் 'நாம் யார்? நமது கழகம் எது? நமது கொள்கைகள் என்ன?' என்பதைப்பற்றித் தெளிவாக மக்கள் உணரத் தலைப்பட்டிருக்கிறார்கள் என்பது விளங்குகிறது.

பட்டணங்களின் வீதிகள் மட்டுமல்ல' பட்டி தொட்டிகள்யாவும்கூட, எதிர்காலத்தில் நம் பாசறையாக விளங்கும் அறிகுறிகளைக் காண்கிறோம் நாம். இதனைத் தேர்தலால் பெற்ற இலாபம் என்றும் கூறலாம்! ஏனெனில், எத்தனையோ இடங்களுக்கு நாம் செல்லும் வாய்ப்பைத் தந்தது, இந்தத் தேர்தல்தான்! நமது நாடு ஏழை நாடாக இருக்கலாம். ஆனால், உள்ளதை யுணர்வதில் நம்நாடு அறிவுப்பஞ்சமுடையதல்ல. ஏனெனில், பணம் — பத்திரிகை—அரசாங்கம் என்னும் இவ்வளவு சக்தி மிக்க அஸ்திரங்களுடையவர்களாக மாற்றார் இருந்தும்கூட, மக்கள் மனமயங்கவில்லை. எது எதிர்காலத்துக்குப் பயன்தரக்கூடியது—எந்தக் கட்சி அரசியலில் நாணயத்தையும் கண்ணியத்தையும் வழங்குகிறது—எதை நாம் நம்பவேண்டும் என்பதில், நமது மக்கள் தெளிவும் திண்மையும் பெற்று வருகிறார்கள். இதுநாள்வரை, பல இடங்களில், நமது கருத்துக்கள் புகவில்லை எனில், அது நம்முடைய தவறே தவிர, மக்களுடையதல்ல! ஏனெனில், மக்களுக்கு நன்றாகத் தெரிகிறது, காங்கிரஸ் அரசு இந்த ஒன்பதாண்டு ஆட்சியில் என்னென்ன 'சாதனைகளைச் செய்தது என்பது. ஊரறிய முழக்கமிட்ட அக்கட்சியால் ஏன் ஒன்றும் சாதிக்க இயலவில்லை என்பதைப் புரிந்துகொண்டிருக்கும் மக்களிடம், வாட்டிடும் டில்லி, வரிபோட்டு வாங்கும் பணத்தைக் கரியாக்கும் விதம், ஓரவஞ்சனையுடன் நம்மை நடாத்திடும் அக்கிரமம், ஒரே கட்சியிலிருப்பதால் அதைக் கண்டித்திடும் ஆற்றலற்ற நிலையிலிருக்கும் காமராஜர்கள், முதலிய விஷயங்களை எடுத்து விளக்கிடும்போது, உண்மையிலேயே அவர்கள் உணருகிறார்கள், திராவிடம் வடநாட்டுப் பிடிப்பினின்றும் விடுபட்டாலொழிய நமக்கு வாழ்வில்லை, என்கிற உண்மையை. அந்தத் தேசியத்தீ, ஒரு முறை உள்ளத்துள் புகுந்துவிட்டதும் ஒவ்வொருவரும் ஒரு 'கழகம்' ஆகாமல் என்ன செய்வர்? "உண்மைதான், நீங்கள் சொல்வது" என்று அகமும் முகமும் மலர்ந்து நமது கருத்துக்களை ஆதரிப்பதோடு, நமக்கான ஆக்கமும் ஊக்கமும் தர, ஓடோடி வருகிறார்கள். இந்த அருங்காட்சியைக் கண்டு, நாம் அகமகிழ்கிறோம்! இதனை எப்படியெப்படி வளர்க்கலாம், இன்னும் எந்தெந்த ஊர்களில் நமது கொள்கைகள் பரவாமலிருக்கிறது, நாட்டின் உடனடிப் பிரச்னைகளிலும் நிரந்தர இன்பம் காணும் வழிகளிலும் நாம் எப்படி நடைபோடவேண்டும், என்கிற ஆலோசனையில் ஆழ்ந்திருக்கிறது, நம் 'அறிவகம்'. இப்படி நாம், நாடு வழங்கும் வரவேற்புகுறித்தும், நமது கொள்கைகளைப் பரப்பும் வழி வகைகள் பற்றியும், ஆர்வமும் ஆசையும்கொண்டிருக்கும் சமயத்தில் இதோ ஒரு செய்தி வருகிறது—யார், நம்மை 'நான்சென்ஸ்' என்று கருதி ஏளனம் செய்தனரோ, 'இதுகளால் என்ன இயலும்' என்று கேலிபேசினரோ, நமது பக்கம் கண்ணைத் திருப்பியதாகக் காட்டிக்கொண்டாலே கவுரவக் குறைவு என்று கருதினரோ, அந்த **வடநாட்டுக் காங்கிரஸ் தலைமை** அச்சம் தெரிவிக்கிறது.

அ. இ, காங்கிரஸ் கமிட்டிக்கு அளித்த இரகசியச் சுற்றறிக்கையிலே, அகில இந்தியக் காங்கிரஸ் தலைவர் தேபர், தென்னாட்டில் வளர்ந்துவரும் திராவிட முன்னேற்றக் கழகம் குறித்து தனது கவலையையும் கருத்தையும் தெரிவித்தாராம். என்ன தெரிவித்திருப்பார்? யூகிக்கமுடிகிறது, நம்மால்!, "ஏ! தென்னாட்டுக் காங்கிரஸ்காரர்களே, இப்படி, திராவிட முன்னேற்றக் கழகம் ஆல்போல் தழைத்து, அருகுபோல் வேர்விட்டு வளர்கிறதே! இதைப்பார்த்துக்கொண்டிருக்கிறீர்களே! அவர்கள்தம் செல்வாக்குக் குறைய ஏதாவது செய்யுங்கள்," என்றுதான், இருந்திருக்க வேண்டும், அந்த அறிக்கை. அதைக்கண்ட நமது காமராஜர்களும், "ஆகா! கவனிக்கிறோம்-விடப்போவதில்லை...," என்று வீர மொழி புகன்றிருக்கக்கூடும்,

தாசர்கள், வேறு என்ன செய்வர்? இவர்கள் என்ன கூறி வந்தனர் என்பது ஒருபுறமிருக்க, அவர்கள் இதயமெல்லாம் புகுந்து குடைகிற அளவுக்கு, நாம் வளர்ச்சி பெற்றிருக்கிறோம்! இந்த வளர்ச்சி, அவர்களுக்கு, அச்சத்தை ஊட்டியிருக்கிறதே தவிர, அறிவுக் கண்களைத் திறந்திடவில்லை. திராவிட முன்னேற்றக் கழகம், நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமும் வளர்கிறது என்றால், அதற்கு என்ன காரணம்?-என்கிற கேள்வி, நிச்சயம், எழாது வடநாட்டுக் காங்கிரஸ் பீடத்துக்கு! அப்படி எழுந்தாலும், காட்டிக்கொள்ள விரும்பாது!! ஏனெனில், அந்த ஆராய்ச்சி, வடநாட்டின் சுய உருவத்தை, எடுத்துக்காட்டுவதாக அமையக்கூடும். "ஏன், தி. மு. க. வளராது? நீங்கள்தான் ஓரவஞ்சனையுடன் நடக்கிறீர்களே! எல்லாத் திட்டங்களையும், ஆலைகளையும் வடநாட்டில்தானே அமைத்துக் கொள்ளுகிறீர்கள். பணம் கேட்டாலும், கையை விரித்துவிடுகிறீர்கள்? இப்படியிருந்தால், ஏன் தி. மு. க. வளராது? ஆகவே, நாங்கள் கேட்கும் உதவிகளையெல்லாம் கொடுங்கள்," என்று சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக் கேட்டிருக்கலாம், காமராஜரும் சுப்ரமணியமும். கிடைக்கிறதா, என்பது, பிறகு — கேட்டிருக்கலாம், இவர்கள்! ஆனால், அப்படிக் கேட்டதாகத் தெரியவில்லை, எனவே, டில்லி கூறியதற்கு, "ஆம்! ஆம்!! வளரத்தான், வளருகிறது. கவனிக்கிறோம்," என்றே பதில் கூறிவந்திருக்கவேண்டும் இவர்கள்.

செல்வாக்கு அமோகமாகி, இந்திய உபகண்டத்தையே வளைக்கும் அளவுக்கு வளர்ந்து, எல்லோரையும் ஆட்டிவைக்கவேண்டும் என்கிற ஆசையுடையவர்களல்ல, நாம். நீதி கேட்கிறோம்! சுதந்திரத்தோடு வாழ ஒரு தனிநாடு கேட்கிறோம்!! உறவை முறித்துக் கொள்வோம் என்று கூறவில்லை- ஆனால், ஒற்றுமை யெனும் பெயரால் உரிமையை உதாசீனம் செய்யாதீர், என்கிறோம். இந்த அடிப்படைக் கோரிக்கையை காங்கிரஸ் தலைவர்கள், விதவிதமாக வியாக்கியானம் செய்து மாசு கற்பிப்பதில் இருக்கிறார்களே ஒழிய, எவரும் உண்மையை உணர்ந்தாரில்லை. அதனாலேயே, அச்சம், பிறக்கிறது, நமது வளர்ச்சிகண்டு! தொழிலாளர்தம் சக்தி திரள்வதைக் கண்டால், முதலாளி அஞ்சத்தான் செய்வான்-சுதந்திர வீரர்கள் தொகை அதிகரிப்பதைப் பார்த்து ஆதிக்கம் செய்வோர் அலறத்தான் செய்வார்கள். அதைப்போல, நமது வளர்ச்சி, இன்று தேபருக்கு கவலையையூட்டுகிறது, கருத்தைக் குடைகிறது. இந்தக் கட்டம், ஒரு தேசிய இயக்கத்துக்கு எளிதில் கிடைக்காது! எனினும், தி. மு. க. இவ்வளவு விரைவில் பெற்றிருக்கிறது!!

தேபரின் கவலையைப் போக்கி, நேருவின் நல்ல பிள்ளையாக ஆவதற்காக, நமது காமராஜர்கள் முயற்சிக்கக்கூடும். தி. மு. க. வின் செல்வாக்கை ஒழித்து, காங்கிரசின் செல்வாக்கை நிமிர்க்கும்படி காங்கிரஸ் கமிட்டிகளுக்கும், பிற காங்கிரஸ்காரர்களுக்கும் தாக்கீதுகள் கிளம்பக்கூடும். அவைகளை எடுத்துக்கொண்டு, நமது காங்கிரஸ் சகோதரர்கள் என்ன செய்ய இயலும்? நாலு கூட்டம் போட்ட இடத்தில் நாற்பது போட்டோம்—ஒரு மணி பேச வேண்டிய இடத்தில் ஒன்பது மணி நேரம் பேசினோம்—சரியான சவுக்கடி, சுளீர் சுளீர் எனக் கொடுத்தோம் — என்று இப்படி, தமது பராக்கிரமத்தைப் பற்றி, பட்டியல் தரமுடியுமே தவிர, வேறென்ன கூற இயலும்?

தி.மு.க.எடுத்துக்காட்டும்எதை இவர்கள் மறுக்கமுடியும்! டில்லி, இந்தியை நுழைக்கவில்லை என்பதைச் சொல்லுவார்களா, டில்லி வடக்குக்கு வெண்ணெயும் தெற்குக்கு சுண்ணும்பும் தடவுகிறது என்பதை மறுக்கமுடியுமா, இந்தியா ஒரு உபகண்டம் அல்ல என்று ஆதாரம் காட்டிப் பேச முடியுமா, மாநிலங்களை டில்லி ஆட்டிப்படைக்கிறது என்பதை யாவது இல்லையென முடியுமா, அல்லது இப்படி டில்லியோடு சேர்ந்திருப்பதால் இன்னின்ன இலாபம் நமக்கு என்றுவது புள்ளி விபரத்தோடு, கூற இயலுமா? தேபர் அச்சக்குறிப்பு கொடுத்த மறுதினமே நேரு பண்டிதர் ஒரு எச்சரிக்கையும் கொடுத்தார், "**ஒவ்வொரு மாகாணங்களும், உதவிக்கு மத்திய சர்க்காரையே எதிர்பார்க்கின்றன. அவையவை, எப்படியாவது தங்கள் தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்ளவேண்டும்**", என்று. இது, ஒன்றே போதுமே, டில்லியால் நாம் என்ன பலன் பெறுகிறோம் என்பதை விளக்க!! நயா பைசாவில் இந்தி, மணியார்டர், கவர், கார்டில் இந்தி — ஐந்தாண்டுத் திட்டத்தில் ஓரவஞ்சனை, இத்தனை அட்டகாசமும் நடாத்தும் டில்லி, எங்கள் கையை எதிர்பாக்காதீர் என்றும் மாநிலங்களுக்கு எச்சரிக்கிறது என்றால் சேர்ந்திருப்பதால் என்ன இலாபம்?

**கலால் வரி**

**சுங்க வரி**

**வருமான வரி**

**இரயில் வரவு**

**வர்த்தகம்**

**ஆலை அமைப்பு**

இத்தனையையும் டில்லிக்குக் கொட்டிக்கொடுத்துவிட்டுவெறும் நிலவரியையும் விற்பனை வரியையுமே பெரிதாக நம்பியிருக்கும் மாகாணங்கள், மத்திய சர்க்காரிடம் நிதி உதவிகூடக் கேட்கக் கூடாதென்றால், இந்தப் பிணைப்பு எதற்கு? 253 கோடிகளை நேரு இராணுவத்துக்கு அழுதுவிட்டு, 'கொடு வரி' என்று குடுமியைப் பிடிக்கிறாரே, அதற்காகவா!! — என்று, நாமல்ல, நிச்சயம் நாடே, கேட்கும். அதற்கு என்ன பதில் சொல்ல முடியும், காங்கிரஸ்காரர்கள்? ஆத்திரமும் கோபமும் அடையலாமே தவிர, தி. மு. க. கிளப்பும் பிரச்னைகளுக்கு, என்ன பதிலைச் சொல்ல இயலும்!! ஒருபோதும், இயலாது—ஏனெனில், "தி. மு. க. செல்வாக்குக்காக இயங்கும்இயக்கமல்ல; விடுதலை இயக்கம். எனவே அதன் கண்முன், விடுதலைதான் முதலில் தெரிகிறது! செல்வாக்கும் அதன் மூலம் கிடைத்த பதவிகளை எப்படியாவது வைத்துக்கொள்ள வேண்டுமே என்கிற ஆசையுமல்ல! இந்தஆசைஆதிக்கக்காரர்களுக்கு, அச்சத்தின் காரணமாகஏற்படக்கூடியது.டில்லி ஆதிக்கத்துக்கு, இப்போது இந்த அச்சம் உருவாகியிருக்கிறது, அதற்குக் காரணம், நாம் பெற்று வரும் வளர்ச்சி! இதை அவர்கள் அச்சமோ அல்லது அதன்காரணமாகக் கிளம்பும் உத்வேகமோ ஒரு நாளும் எதுவும் செய்துவிட முடியாது!! அந்தளவுக்கு நாடு, பக்குவம் பெற்று வருகிறது.

★

# முதல் முழக்கம்

'மைசூர் மாநிலத்திலிருந்து வசூலித்துச் செல்லும் வரித் தொகையில் பெரும் பகுதியை நிதிப் பற்றாக் குறை மாநிலமான எங்கள் மாநிலத்திற்கு ஒதுக்கியே ஆகவேண்டும். நிதியின்மையால் எங்கள் மாநிலம் வாட, எங்கள் மாநிலத்தினின்றும் வசூலிக்கப்படும் வரித் தொகையின் பெரும் பகுதி எங்களுக்குப் பயன் படாமல் போவதேன்?'

என்ற முறையிலே நிதிக் குழுவிடம் போர் முரசு கொட்டியிருக்கிறது மைசூர் மாநில அரசாங்கம். இத்துணை நாட்கள் வடக்கு இழுத்த போக்கிற்கு வளைந்து கொடுத்த இம் மாநில ஆட்சியாளர் இன்று கூன் நிமிர்ந்து குமுறி எழுந்துள்ளனர்.

'நிதிப் பற்றாக் குறை' 'திட்டங்களைத் திட்டமிட்டபடி நிறைவேற்ற நிதியில்லை' என்ற கூச்சல் மைசூர் மாநிலத்திலே மட்டும் அல்ல, தென் மாநிலங்கள் அனைத்திலும் நிலவும் அவல நிலையாகும். மாநிலங்களில் மாநில திட்ட இலாகா திட்டமிட்ட பல திட்டங்கள் ஏட்டளவிலே நின்றிருக்கின்றன. மற்றும் சில ஆரம்பிக்கப்பட்டு இடையிலே கைவிடப்பட்டுள்ளன. இதற்கெல்லாம் கூறப்படும் ஒரே காரணம் நிதியில்லை என்பதாகும்.

அரசாங்க கஜானா காலியாகுமளவுக்கு மக்கள் வரி செலுத்தாமல் உள்ளனரா என்றால் அதுவும் இல்லை. நம் நாட்டு மனிதன் தன் வருவாயின் முக்கால் பகுதிக்கு மேல் வரியாகச் செலுத்தத் தவறுவதில்லை. எனினும் அவன் வாட்டம் நீக்கப்படுவதில்லை. காரணம் கேட்பின் நிதி நிலை சரியில்லை என்று பதில் வருகிறது. அவ்வாறாயின் மக்கள் உழைத்துத் தந்த வரி எங்கே? என்று கேட்கும்போதுதான் பழி தங்கள்மீதே விழுவதை உணரும் மாநில அரசாங்கங்கள் டெல்லியைச் சுட்டிக் காட்டுகின்றன.

'நமது மக்கள் தரும் வரியில் அறுபது சத விகிதத்திற்கும் மேல் நமது மாநில கஜானாவுக்குச் செல்வதில்லை. அவர்களின் எஜமானர்களாக வீற்றிருக்கும் 'செங் கோட்டைச் சீமான்'களின் கஜானாவுக்குப் போய்ச் சேருகிறது. சராசரி முப்பது சதவிகிதத்திற்கும் குறைவான வருவாய் பெறும் மாநில அரசாங்கம் தனது குறைந்த நிதியை வைத்துக் கொண்டு திட்டமிடுவதும், செயலாற்ற இயலாது திண்டாடுவதுமான நிலையில் இருக்கின்றன. இதன் மூலம் வரியை எல்லாம் கொட்டிச் செல்வது மத்திய அரசாங்கம், மக்களிடம் வதைபடுவதோ மாநில அரசாங்கம் என்ற வேதனையான நிலை நிலவுகிறது.

வருமான வரி, பெட்ரோல் வரி, இறக்குமதிப் பண்டங்கள்மீது வரி அன்றாட அவசியப் பொருள்கள் மீது வரி போன்று அபரிமித வருமானம் தரத்தக்க வரிகள்யாவும் மத்திய அரசாங்கத்திற்கு சொந்தம் என்றால், மாநில அரசாங்கம்

**புவியரசு**

எந்தப் பொருள்மீது வரி வசூலிக்கமுடியும்? அவ்வாறு வசூலிக்க முனைந்தாலும் மக்கள் எவ்வாறு கொடுக்க முன் வருவர்?

மாநிலங்களில் விளையும் புகையிலை, தேயிலை, காப்பி, இரப்பர், தேக்குமுதலிய எல்லாப் பொருள்கள்மீதும் விதிக்கப்படும் வரிகள் யாவும் மத்திய ஆட்சியாளரின் மடியை நிரப்பவும், மாநில அரசாங்கங்கள் அப்பொருள்கள்மீது எவ்வித உரிமையும் கொண்டாடுவதற்கு இல்லாதொழியவுமான நிலை ஏற்பட்டுள்ளது.

இந்திய உபகண்டத்திலேயே பெருமளவுக்கு கோடிக்கணக்கான பவுண்டுகள் புகையிலையை கோதாவரிப் படுகையிலே விளைவிக்கிறது ஆந்திர மாநிலம். ஆனால் அதிலின்றும் வரி வசூலிக்கும் உரிமையோ மத்திய அரசாங்கத்திற்குட்பட்டுள்ளது. ஆகவே பாடுபடுவது ஆந்திர மாநிலம்; பயனடைவதோ மத்திய அரசாங்கம் என்பது தெளிவாகின்றது.

இதையுணர்ந்த ஆந்திர அமைச்சு நிதிப்பற்றாக் குறையால் தன் மாநிலம் நலிவதிருக்குள்ளாக, அந்நிதி நிலையினைச் சீர்செய்து கொள்ளத் தனது மாநிலம் விளைவிக்கும் புகையிலையினமீது வசூலிக்கப்படும் வரி தனக்குப் பயன் படாமல் மத்திய ஆட்சியாளருக்குப் போவதா? எனக் கூறிப் போராடிற்று. இறுதியில், வசூலிக்கப்படும் புகையிலை வரித் தொகையில் மிகச் சிறிய அளவிலே வேண்டுமானால் திருப்பித் தருவதாகக் கூறினர். மத்திய ஆட்சியாளர் மாநிலங்களின் நல் வாழ்விற்கென்று கொட்டிக் கொடுக்காவிடினும், கொள்ளையிடாமலாவது இருக்கவேண்டாமா?

இவையன்றி மாநிலங்களில் நடக்கும் பல தொழில்கள்மீது விதிக்கப்படும்'எக்சைஸ்டியூடி' மத்திய ஆட்சியாளராலேயே வசூலிக்கப்படுகின்றது. குறிப்பாக எண்ணெய்வித்துக்களைக்கொண்டு தயாரிக்கப்படும் எண்ணெய்த் தொழிலினமீதும்மத்தியஆட்சியாளரால் 'எக்சைஸ் டியூடி' பெருமளவிலே சுமத்தப்பட்டுள்ளது. இத்தகுபெருஞ்சுமையால்பாதிக்கப்படுவது வட மாநிலங்களைக் காட்டிலும் தென் மாநிலங்களே அதிக

மாகும். எண்ணெய்த்தொழில்மீது விதிக்கப்பட்டுள்ள ஒன்பது ரக வரிகளன்றி, மத்திய ஆட்சிப் பீடமும் தன்பங்கிற்கு பெருந்தொகையினை 'எக்சைஸ் டியூடி'யாக வசூலிப்பதன் மூலம் தென்னாட்டு எண்ணெய்த் தொழிலை நசிக்கச் செய்கிறது. இதன் மூலம் பல்லாயிரக் கணக்கான தென்னாட்டுத் தொழிலாளர் வேலையிழந்து வாடவும், தென்னாட்டுத் தேவைக்குப் போதுமான எண்ணெய்ப்பொருள்கள் கிட்டாமறபோகவே, வடநாட்டு வணிக வல்லூறுகள் கொள்ளை இலாபமடிக்கவும், வளர வேண்டிய எண்ணெய்த் தொழில் சிதையவுமான சூழ்நிலை எழவாரம்பித்துள்ளது.

இவ்வாறு, தென் மாநிலங்களின் தொழில் வளப்பெருக்கத்திற்கு உதவும் பெருநோக்கில்லை எனினும், இருக்கும் தொழில்களையாகிலும் நசுக்கிவிடாமல் காக்கும் மனப்போக்கு மத்திய ஆட்சியாளருக்கிருக்கவேண்டாமா?

மாநில அரசாங்கங்களின் நிதிநிலைப் பற்றுக் குறையினைப் போக்க மத்திய அரசாங்கம் வசூலிக்கும் வரியிலிருந்து மாநில அரசாங்கங்களுக்குத் தொகை ஒதுக்க முனைந்தது.

மத்திய ஆட்சிப் பீடத்திலே அமர்ந்திருக்கும் பெரும் புள்ளிகள் நேர்மையான உள்ளமும், தெளிந்த நோக்கும் உடையோராயின் என்ன செய்திருக்கவேண்டும்? மாநிலங்களுக்கு நிதியொதுக்கிய வகையிலே நேர்மையாக நடந்துகொண்டிருக்க வேண்டும். ஆனால் அவர்களின் செயலிலே நியாயம் இருந்திருக்கிறதா என்றால், துளிகூட இல்லை என்பது தெளிவாகும்.

வடக்கு, தெற்கு என்ற பேதப் பேச்சு பிற்போக்குத் தன்மையது என்று நாவுலரக் கூவும் இந்தக் கோலோச்சிகள், குடிக்கக் கூழுக்கும், உடுக்கஉடைக்கும் வழிஇன்றி நடைபாதையிலே வாழும் மக்களைப் பெருமளவிலே பெற்றுள்ள தென் மாநிலங்களுக்குத் தேவையான நிதியொதுக்குவது அவசியத்திலும் அவசியமாய் இருக்க, மிகக் குறைந்த அளவிலேயே நிதியொதுக்கக் காரணம் யாது?

அண்மையில், டெல்லியிலே பேசி இருக்கிறார் அனந்தசயனம் ஐயங்கார், நமது சொல்லின் செல்வர் சம்பத் அவர்கள் முன்னிலையில் "வடநாடு—தென்னாடு என்று பேதப்படுத்தி பேசுவது நேர்மைக்கு முரண்பட்டதென்று" தென்னாட்டு மனிதனைக் கசக்கிப் பிழிந்து, அவனது வியர்வைத் துளிகள் தரும் பெரும் தொகையைக் கவர்ந்துசென்று, அவன் கஷ்டம் நீக்கப் பணம் வேண்டும் என்று கேட்கும்போது பணமில்லை என்று பல்லவி பாடுவது நேர்மையா?

வடக்கு தெற்கு என்று பேதம் பேசுவது நேர்மையில்லை என்றால், வடக்கு தெற்கென்ற பேதஉணர்ச்சியை இதயத்தே கொண்டு, கனியினை வடக்கிற்கும், காயினைத் தெற்கிற்கும்தரும் வடவராதிக்கத்தின் உள்ளப்போக்கு நேர்மையான தென்கிறாரா,அனந்தசயனர்.

இந்திய உபகண்டத்திலேயுள்ள மற்றைய மாநிலங்களைப் போன்றே தென் மாநிலங்களும் வருமான வரியினைக் கொட்டிக் கொடுக்கின்றன டில்லி ஆட்சிப்பீடத்திற்கு. அத் தொகையினை மாநிலங்களுக்குப் பிரித்துக் கொடுப்பதிலே நேர்மையைக் கடைப்பிடித்திருக்க வேண்டாமா மத்திய ஆட்சியாளர்கள்.

இந்திய மாநிலங்கள் முழுமையிலுமாக வசூலிக்கப்படும் வருமான வரித் தொகையில் தென் மாநிலங்கள் தங்கள் சக்திக்கும் மீறிய அளவிலே சுமார் நானூற்றைம்பது கோடிக்கு மேல் கொடுத்துக் கொண்டிருக்க, வசூலிக்கப்பட்ட தொகையை மாநிலங்களுக்கு பிரித்துக் கொடுக்கும் நேரத்தில் வட மாநிலங்களுக்கு மிகுதியாகவும், தென் மாநிலங்களுக்கு மிகக் குறைந்த அளவிலும கொடுக்க முனைவது நேர்மையின்பாற்பட்டதாகுமா.

தென்னவர்தம் செல்வம் வடவரால் கொள்ளையடிக்கப் படுகிறது என்று நாம் கூறிய நேரத்திலே "பெட்டிச் சாவி என் கையில் இருக்க, பொருளைப் பிறர் கவர விட்டு விடுவேனா?" என்று முழக்கமிட்டாரே டி. டி. கே. அவர் அதிகாரத்தின் கீழுள்ள நிதி இலாகா வெளியிட்டிருக்கும் புள்ளி விபரத்திற்கு என்ன பதில் கூறப்போகிறார். வடக்கு தெற்கு என்று பிரித்துப் பேசுவது தீது என்று உபதேசம் செய்பவர்கள், அத்தகைய உணர்ச்சி எழக் காரணம் என்ன என்பதைச் சிந்தித்துப் பார்க்கவேண்டும்.

மத்திய அரசாங்கத்தின் கஜானாவை நிரப்பும் முக்கிய வரிகளில் ஒன்று மாநிலங்களில் இருந்து சுரண்டப்படும் வருமான வரியாகும். நிதிப் பற்றுக்குறையின் காரணமாக அடிக்கடி துண்டு விழும் 'பட்ஜெட்' தயாரித்து வரும் மாநில அரசாங்கங்களுக்குத் துணை புரியும் வகையிலே கண் துடைப்பிற்காக வருமான வரித் தொகையில் இருந்து 55 சதவிகிதத் தொகையை பிரித்துக்கொடுக்க முன் வந்தனர் மத்திய ஆட்சியாளர். அவ்வாறு தொகையினைப் பிரித்துக் கொடுப்பதிலும் வடக்கு தெற்கு என்ற பேத எண்ணம் கொண்டு, தென் மாநிலங்களைத் தேம்ப விட்டு, வட மாநிலங்களுக்கு வாரி வழங்கப்படுவானேன். கீழ்க்காணும்புள்ளிவிபரத்தைக் காணும் எந்த நல்ல உள்ளம் படைத்த மனிதரும் வடக்கு தெற்கு என்ற பிரிவினை உணர்ச்சிக்கு வித்தூன்றியவர்கள் வடநாட்டு ஆட்சிப்பீடமேறி இருக்கும் வஞ்சக நெஞ்சுடையோர்தான் என்பதைத் தெள்ளத்தெளிவாகக் கூறத் தயங்கார்.

வளம் கொழிக்கும் வட மாநிலங்களுக்கு ஒதுக்கப்பட்டுள்ள மொத்த தொகையின் சதவிகிதம் 74·51 ஆகும்.

அதேபோது வடவருக்கு கப்பம் கட்டிவிட்டு கைகட்டிக் கலங்கி நிற்கும் தென் மாநிலங்களுக்கோ 25·49 சதவிகிதத் தொகையே ஒதுக்கப்பட்டுள்ளது.

ஏன் இந்த ஏற்றத்தாழ்வு? ஒரே நாட்டின் ஒரு பகுதி வளம் சிறக்கவும், மற்றொரு பகுதி வறுமையிடம் தஞ்சடையவுமான நிலை ஏன்?

பொருள் வளம், தொழில் வளம் மிக்க வட மாநிலங்களான பம்பாய்க்கு 18·91 சதவிகிதமும், உத்தரபிரதேசத்திற்கு 15·59 சதவிகிதமும், மேற்கு வங்கத்திற்கு 11·48 சதவிகிதமும், பீகாருக்கு 9·31 சதவிகிதமும் கொடுக்க முன்வந்த மத்திய ஆட்சியாளர், பொருளின்றி, தொழிலின்றி, எழில் குன்றி ஏந்திய கரத்தோடு ஏங்கி நிற்கும் தென் மாநிலங்களான சென்னைக்கு 7·95 சதவிகிதமும், மைசூருக்கு 5·93 சதவிகிதமும், ஆந்திரத்திற்கு 8·01 சதவிகிதமும், கேரளத்திற்கு 3·60 சதவிகிதமும் மட்டுமே கொடுக்கக் காரணம் யாது?

வடவரின் வக்கிரப் போக்கினைத் தட்டிக்கேட்கும் உள்ளஉரம் தென் மாநில ஆட்சியாளருக்கு இல்லை என்பதா? அன்றி தென் மாநிலங்களின் மீது மத்திய அமைச்சு ஆதிக்கத்தை வலுப்படுத்துகிறது என்பதா?

இமயம் முதல் குமரி வரை ஒரே நாடு, இதில் ஏற்றத்தாழ்வுகட்கு இடமேது என்றெல்லாம் வாதம் புரிபவர்கள் சிந்திக்க வேண்டாமா, இத்தகைய கெடு நோக்கினை.

இதன்றி, மாநிலங்களின் நிதிப் பற்றுக்குறையை நீக்க சேமிப்பு நிதியினின்றும் மானியமாக உதவித் தொகையளிப்பதாக மத்திய ஆட்சியினரால் நாடகமாடப்பட்டது. சேமிப்பு நிதியினின்றும் வட மாநிலங்கள் எவ்வளவு உதவியை எதிர்பார்க்கின்றனவோ, அந்த அளவு எதிர்பார்க்க தென் மாநிலங்களுக்கிருக்கும் உரிமையை யாரும் மறுக்க இயலாது. எனினும் மத்திய அமைச்சு எத்தகைய மாபாதகம் செய்துள்ளது என்பதை எண்ணவே இதயம் துடிதுடிக்கும்.

| | | |
|---|---|---|
| அசாம் | 100 | இல. |
| பீகார் | 80 | ,, |
| பம்பாய் | 130 | ,, |
| ம. பிரதேசம் | 251 | ,, |
| ஒரிசா | 107 | ,, |
| பஞ்சாப் | 163 | ,, |
| ராஜஸ்தான் | 115 | ,, |
| மே. வங்கம் | 83 | ,, |
| ஜம்மு, காஷ்மீரம் | 175 | ,, |

ஆகமொத்தம் 1204 இலட்சம் வட மாநிலங்களுக்கு வழங்கப்பட்டது. ஆனல் அதே போது தென் மாநிலங்களுக்கு ஒதுக்கப்பட்ட தொகையோ வெனில்,

| | | |
|---|---|---|
| சென்னை | 5 | இல. |
| ஆந்திரம் | 24 | ,, |
| கேரளம் | 41 | ,, |
| மைசூர் | 46 | ,, |

ஆகமொத்தம் 116 இலட்சமே! வசதிகள் வதியும் வட மாநிலங்களுக்கு ஒதுக்கப்பட்ட தொகையின் அதிக பட்ச வரம்பு 251 இலட்சமாக இருக்க, வாழ்வே சுமை என்றெண்ணி வறுமையில் வாடும் தென் மாநிலங்களுக்கு ஒதுக்கப்பட்ட தொகையின் அதிக பட்ச வரம்போ 46 இலட்சத்தைத் தாண்டவில்லை என்ருல் இது எதைக் காட்டுகிறது.

வடக்கு பெறும் வசதியையும், வாழ்வையும், தெற்கு எதிர்பார்க்கவியலாதென்றுல், அவ்வடக்கோடு தெற்கு இணைந்து வாழவேண்டும் என்றுகூறுவதிலே பொருளிருக்க முடியுமா?

அசாமுக்கு காட்டப்பட்ட ஆதரவு ஆந்திரத்திற்கில்லை. காஷ்மீருக்குக் காட்டப்பட்ட கருணை கேரளத்திற்கில்லை. வங்கத்திற்கு வழங்கிய வசதி சென்னைக்கில்லை. மொத்தத்தில் வடநாட்டிற்கு அடிமைப்பட்டிருக்கும் தென்னுட்டிற்கு வாழ்வே இல்லை என்பதைத் தவிர வேறென்ன எண்ண முடிகிறது.

வெள்ளம் வருமுன் அணையிட்டுக் கொள்ளவேண்டும் என்பதைப் போல, வடநாட்டு ஆதிக்கத்தின் பிடி இறுக்கப்படுவதை தவிர்க்கும் எண்ணத்தின் எதிரொலிதான் மைசூர் மாநில அமைச்சு கொட்டும் உரிமை முரசு என்று சொல்லவும் வேண்டுமா?

★

# முன்னேற்றமா!!

[ஏ. கலைவாணன், B. A.]

உலக நாடுகளுடன் ஒப்பு நோக்கும் போது இந்திய உபகண்டத்தின் பொருள் உற்பத்தி மிககுறைவானது. எடுத்துக்காட்டாக இதோ கோதுமை உற்பத்தி. ஒரு ஏகருக்கு கிடைக்கும் சராசரி விளைவு குறைவானது. இந்தியாவில் ஏகருக்கு கோதுமை சராசரி விளைவு 700 பவுண்டுகளாகும். அதே சமயம் அயல்நாடுகளிலோ...?

| | | |
|---|---|---|
| எகிப்து | 1918 | பவுண்டுகள் |
| ஜப்பான் | 1713 | ,, |
| சீனம் | 898 | ,, |

கோதுமையின் நிலைமைதான் இப்படி என்ருல், அரிசி உற்பத்தியும் குறைவாகத்தான் உள்ளது. இந்தியாவில் ஏகர் ஒன்றில் சராசரி உற்பத்தி 750 பவுண்டுகளாகும்.

| | | |
|---|---|---|
| ஜப்பான் | 3444 | பவுண்டு |
| எகிப்து | 2998 | ,, |
| சீனம் | 2433 | ,, |
| ஐக்கிய நாடுகள் | 2185 | ,, |

ஒப்பிட்டுப் பார்க்க முடியாத அளவுக்கு தரம் உயர்ந்துள்ளது வெளி நாடுகளில்.

விவசாயத் துறையில் மட்டுமல்ல; கால்நடை வளத்திலும் இந்தியாமிகப் பின்னடைந்துள்ளது. உலக கால்நடைகள் நான்கில் ஒருபாகம், இந்தியாவின் பங்கு. ஆனல் இங்குள்ள ஆடுமாடுகள், கால்நடைகளின் எண்ணிக்கையைத்தான் அதிகரிக்க உதவுகிறதே தவிர, இவற்றின் தரம், பயன், எண்ணிட வருந்தத்தக்கதாம். ஆண்டொன்றுக்கு ஒரு மாட்டிலிருந்து கிடைக்கும் சராசரி பாலின் அளவு, இங்கே, 413 பவுண்டுள்ளது. இது உலகிலே மிகமிகக் குறைந்த அளவு. இப்படி பொருள் உற்பத்தி குறைவாக இருக்கும்போது, தேசிய வருமான விலைவாசி அடிப்படையில் உயர்ந்துள்ளதாகச் சித்தரிக்கப்பட்டு மகிழ்வதில் பயன் இல்லை.

1955—56ம் ஆண்டில் ஒவ்வொருவரின் சராசரி வருமானமான ரூ. 272·1ஐ மற்றை நாடுகளின் தரத்தோடு ஒப்பிட்டுப் பார்க்கும்போது, உண்மையில் நம் மக்கள் எவ்வளவு பின்தங்கியுள்ளனர் என்பது நன்கு தெரியவரும். அமெரிக்காவில் சராசரி வருமானம் ரூ. 10000. என்பாவிலே 5000. முன்னேறிவிட்டதாக கீர்த்தி முரசு முழக்கும் இந்த பாரதத் திருநாட்டிலோ அந்தத்தொகை 272·1. வந்தேமாதரம் அரியணைக்கு வந்து என்ன பலனைத் தந்திருக்கிறது. இந்த நாடு எல்லாத் துறைகளிலும் பிந்தியுள்ளது. 3600 மைல் நீளமுள்ள கடற்கரை இருந்தும் உலக வாணிகத்தில் முக்கிய இடம் பெற முடியவில்லை. சென்னை, பம்பாய், கல்கத்தா துறைமுகங்களில் ஏற்றுமதி செய்யப்படும் பொருள்கள் எடை இதோ,

| | | |
|---|---|---|
| சென்னை | 20 | லட்சம் டன் |
| பம்பாய் | 70 | ,, |
| கல்கத்தா | 90 | ,, |

இந்தியா உலக வாணிகத்தில் ½ சதவிகித எடையுள்ள பொருள்களை அகற்றும் கப்பல் வசதியைத்தான் பெற்றிருக்கிறது. அயல்நாடுகளிலோ

| | | |
|---|---|---|
| அமெரிக்கா | 29 | சதவிகிதம் |
| பிரிட்டன் | 20 | ,, |
| நார்வே | 7 | ,, |

சிக்கனமாக செயலாற்றுவாவது தெரிகிறதா இந்தச்சர்க்காருக்கு. அதுவும் இல்லை. பெங்களூரில் தனிப்பட்ட கம்பெனி ஒரு பெட்டியை 140000 ரூபாயில் தயாரிக்கிறதென்ருல், இவர்களுக்கு பெரம்பூர் ரயில் பெட்டி தொழிற்சாலையில் தயாரித்து முடிக்க 240000 ரூபாய் ஆகிறது. வந்தே மாதரம் அரியணை வந்த பலன் இந்த வக்கணையில் இருக்க, காங்கிரசார் மட்டும் தங்கள் சாதனைகளால் நாடு முன்னேறி விட்டதாக களிகொள்கின்றனர்!!

# சளிக்காய்ச்சல்

கடந்த சில நாட்களாகத் தமிழ்நாடு எங்கணும் சளிச் சுரம் ஏற்பட்டிருக்கிறது. இச்சுரம் நச்சுச் சுரங்களில் ஒன்றாகும். இச்சுரத்தால் ஆண்களும் பெண்களும், குழந்தைகளுமாகப் பல்லாயிரக் கணக்கானவர் பீடிக்கப்பட்டிருக்கின்றனர். இதனால் தொல்லை அனுபவிக்கின்றனர். இச்சுரம் தொற்றும் தன்மை வாய்ந்ததாதலின் எண்ணற்றோர் இதனால் பீடிக்கப்பட்டிருக்கின்றனர். இத்தகைய தொற்றுச் சுரத்திற்கு 'இன்புளுவன்சா' என்று ஆங்கிலத்தில் கூறுவர்.

மக்கட்கு ஏற்படும் பல்வேறு பிணிகளிலே சுரமே மற்றனைய பிணிகளுக்கெல்லாம் தலையாயது என்று கூறத்தகும். அதுவும் தொற்றும் தன்மையுடைய சுரம் மற்றனைய தொற்றும் தன்மையற்ற சுரங்களைக்காட்டிலும் கொடியது. தீங்கானது. ஏனெனில் தொற்றும் தன்மையிலுள்ள சுரமாயினும் மற்றனைய தொற்றும் பிணிகள் ஆயினும் அவை மற்றவர்களுக்கும் எளிதில் பரவி பல்லாற்றானும் தீங்கு பயக்கும் தன்மையினைப் பெற்றிருப்பதாலேயே கொடியது, தீங்கானது என்று கூறுகிறோம். ஒருவர் தொற்றும தன்மையற்ற சுரமொன்றாலோ அல்லது மற்றனைய தொற்றும் தன்மையற்ற பிணியாலோ பீடிக்கப்பட்டால் அதனால் அன்னவர் ஒருவரே தொல்லையனுபவிப்பார் அல்லது தவிர்க்க முடியாத நிலையில் அதற்குப் பலியாவார். ஆனால் துரதிர்ஷ்ட வசமாகத் தொற்றும் தன்மையுள்ள பிணியொன்றால் ஒருவர் பீடிக்கப்பட்டாலோ, தானும் துன்பத்தையும் தொல்லையையும் அனுபவித்துக்கொண்டு இருப்பதோடு மற்றவர்களுக்கும் அத்துன்பத்தையும் தொல்லையையும் அடையும் சூழ்நிலையைத் தோற்றுவிப்பார் என்பதில் சந்தேகமே இல்லை.

இன்புளுவன்சா எனும் சளிச் சுரம் ஒருவித சிறிய கிருமியால் ஏற்படுவதாக மருத்துவர்களால் கண்டறியப்பட்டிருக்கிறது. நச்சுக் கிருமிகளின் மூலமாக ஏற்படும் எத்தகைய பிணியும் மக்களுக்குத் தொற்றும் தன்மை உள்ளதாகவே இருக்கும். எடுத்துக்காட்டாகக் கூறுமிடத்து க்ஷயம், காலரா, டைப்பாய்டு, அம்மை, சீதபேதி, டிப்தீரியா போன்ற பல்வேறு பிணிகளும் மக்களுக்கு இன்னொருவரிடமிருந்து எளிதில் தொற்றும் தன்மை உடையன என்றே கூறத்தகும். பல்வேறு தொற்றுப் பிணிகளில் சிலவற்றிற்கு உரிய காலத்தில் சரியான சிகிச்சை செய்துகொள்ளத் தவறினால் மணிக்கணக்கிலோ, நாள் கணக்கிலோ, மாதக் கணக்கிலோ அவை மனிதனைக் கொல்லும் சக்தி உடையனவாக இருக்கின்றன. உதாரணமாகக் காலரா என்னும் நச்சுப் பேதியால் ஒருவர் பீடிக்கப்பட்டால் அன்னவர் சில மணி நேரத்திலோ, அல்லது பல மணி நேரத்திலோ மரணமடையலாம். ஆனால் க்ஷயரோகத்தால் ஒருவர் பீடிக்கப்பட்டால் மாதக் கணக்கிலோ அல்லது வருஷக் கணக்கிலோ அவதியுற்று அப்பிணிக்கு அன்னவர் பலியாகலாம்.

கண்களுக்குப் புலப்படாத நிலையில் இருக்கும் அற்பமும் நுட்பமுமான அளவிலுள்ள நச்சுப்பிணிக் கிருமிகள் ஆறடி மனிதனைக் கொல்லும் வலிமையைப் பெற்றிருப்பது விந்தையிலும் விந்தையே என்போம்.

உலகத்தின் கண் மானிட வர்க்கத்தை மாய்த்தொழிக்கும் பல்வேறு தொற்றுப் பிணிகளும் எண்ணற்ற நச்சுக் கிருமிகளாலேயே ஏற்படுகின்றன. இக்கிருமிகள் மாந்தர் சமுதாயத்தின் பயங்கரமான விரோதிகள். இக்கிருமிகள் இருக்கும் இடங்களில் அக்கிருமிகளுக்கேற்ற பிணிகளும் உருவாகிக் கொண்டிருக்கும். ஆகவே அக்கிருமிகளை அழித்து ஒழித்தாலொழிய அப்பிணிகளும் அவ்விடத்தைவிட்டுப் போகாதென்றே கூறவேண்டும். அக்கிருமிகளை ஒழிப்பதற்கு பெட்டால் பினாயில் போன்ற பல்வேறு கிருமிநாசினி மருந்துகள் பேருதவி புரிந்து கொண்டிருக்கின்றன. ஆகவே கிருமிகளை ஒழிப்பதற்கு முறையாகக் கிருமிநாசினி மருந்துகளை உபயோகிப்பது பிணி தடுப்பு முறைகளிலே சிறந்த முறையாகும் என்று கூறலாம்.

சளிச் சுரம் தொற்றும் தன்மை வாய்ந்ததொரு சுரம் ஆதலின் ஓரிடத்தில் அது தோன்றிடின் பெரு அளவில் அது பரவி மக்களை வாட்டுவதே இயல்பாகும். இத்தொற்றுச் சுரத்தின் ஆரம்பத்திலே மூக்கில் சளி பிடித்தல், தும்மல், இருமல் போன்ற குணக்குறிகள் இருப்பதால் இதைச் சுவாச உறுப்புக்கள் சம்பந்தமான பிணிகளில் ஒன்று என்றும் கூறலாம். இச்சுரத்தால் சுவாச உறுப்புக்கள் ஓரளவுக்கு ஆரம்பத்

தில் பாதிக்கப்பட்டாலும் அவ்வுபத்திரவம் அதிக நாட்கள்வரை தொடர்ந்து நீடிப்பதில்லை, நாளடைவில் அவ்வுறுப்புக்கள் இயற்கையான நிலையையும் தன்மையையும் பெறுவது இயல்பு!

சளிச்சுரம் தொற்றுப் பிணிகளிலே ஒன்ருயினும் இப்பிணியால் பீடிக்கப்பட்டவர் எவரும் சர்வ சாதாரணமாக எளிதில் சுகமடைந்துவிடுவர். இச் சுரத்தோடு மற்றெருருபிணியும் சேர்ந்து கொண்டால் அதனுல் பிணியாளருக்குத்தொல்லையும் அபாயமும்ஏற்படலாம். சளிக்காய்ச்சலாக இருக்கிற நிலையில் வேறு நிமோனியா சுரமும் அதோடு சேர்ந்துகொள்ளலாம். நிமோனியா என்னும் வாத சுரம் மற்றேனைய சுரங்களைக் காட்டிலும் தீங்கு பயப்பது, அபாயகரமானதுங்கூட. கபவாத சுரம் சுவாசகோசங்களைப்பற்றிய பிணிகளிலே ஒன்ருகும்.

சளிச்சுரம் மட்டில் ஒருவருக்கு ஏற்பட்டால் அச்சுரம் அன்னவருக்குச் சர்வசாதாரணமாக ஒன்று முதல் நான்கு நாட்கள் வரையிலும் இருந்து சுகமாகும். ஆனுல் சிற்சில சமயங்களில் அதற்கு மேலும் நீடிக்கலாம். அல்லது ஏற்படுவது உடலின் நிலை, பிணியின தன்மை போன்றவற்றைப் பொறுத்தது.

ஆயினும் இச் சளிச்சுரம் ஜப்பான் முழுவதும் 1956 அக்டோபர் முதல் 1957 மார்ச்வரை பரவிய பொழுது 1475-பேர் அதனுல் இறந்தனர் என்றும், இப்பொழுது ஜப்பானில் சளிச்சுரம் இல்லையென்றும் சுகாதார மந்திரிகள் அறிவித்துள்ளதாகப் பத்திரிகைச் செய்தியொன்று கூறுகிறது.

ஜப்பானில் 3-லட்சத்து 3834-பேருக்குச் சளிச்சுரம் கண்டது என்றும் யுத்த காலத்திற்குப் பிறகு 1953-ம் வருஷத்தில்தான் ஜப்பானில் மிக மோசமான சளிச்சுரம் ஏற்பட்டதென்றும் அந்த வருடத்தில் 89942-பேருக்குச் சுரம் கண்டது என்றும் 2659-பேர் அதனுல் இறந்தனர் என்றும் அதிகாரிகள் கூறுவதாகப்பத்திரிகைச் செய்தியொன்றில் இருந்து அறிகிறேம்.

இச் சுரத்தால் பீடிக்கப்பட்ட பிணியாளரின் உடல் முழுவதும் பொறுக்க முடியாத அளவுக்கு வலியும் வேதனையும் இருக்கும். அதுவும் குறிப்பாக இடுப்பிலும் தலையிலும் வேதனை பெருமளவில் இருக்கும். அவ்வாருன வலியும் வேதனையும் இச்சுரத்தால் பீடிக்கப்பட்டவருக்குத் திடீரென்றே ஏற்படும். உடனே உடலின் வெட்ப நிலையும் சுரமும் அதிகரிக்கும். பிணியாளருக்கு ஜலதோஷமும் மூக்கிலிருந்து அதிக அளவில் சளி வருதலும், அதிகமாகவோ குறைவாகவோ இருமலும் தோன்றுவது இயல்பு. ஒரு சிலருக்குத் தொண்டையில் வலியுமிருக்கலாம். இவ்வாருன முறையில் ஏற்படும் குணங்குறிகள் சர்வ சாதாரணமாக எல்லோருக்கும் ஏற்படக்கூடிய பொதுக் குணங்குறிகளாகும். இவற்றில் ஒரு சிலருக்கு வேறு சில தனிப்பட்ட குணங்குறிகளும் ஏற்படுவதும் உண்டு. இவ்வாறு ஏற்படுவது என்பது அவரவருக்குள்ள உடல் நிலையையும் பிணியின் தன்மையையும் பொறுத்துள்ள விஷயமாகும்.

இச் சுரத்தால் பீடிக்கப்பட்டவருக்கு உடலின் வெட்ப நிலை இயற்கையான நிலைக்கு வந்து கொண்டிருப்பதும் உடல் எங்கணும் உள்ள வலி, வேதனை குறைவதும், ஜலதோஷம், இருமல், சளி முதலிய குணங்குறிகள் குறைவதும் நல்ல பசி அதிகரிப்பதும் நல்ல தூக்கம் ஏற்படும் நிலை உண்டாவதும் பிணி துரிதமாக அகன்று வருகிறது என்பதற்கான குணங்குறிகள் ஆகும்.

இச் சுரத்தில் பெரும்பாலும் சிக்கல் ஏற்படுவதில்லை. ஆயினும் ஒருசிலரின் உடல்நிலைக் கேற்றவாறு சிக்கலானநிலையும் ஏற்படுவதுண்டு. இவ் வியாதியால் சிக்கல்கள் துரதிர்ஷ்டவசமாக அதிகரித்து விட்டால் அதன் பயனுகச் சுவாச உறுப்புச் சம்பந்தமான காற்றுக் குழாயும் பிராங்கியல் குழாய்களும் பாதிக்கப்படும். இதனுல் சுவாச கோசங்களுங் கூடப் பாதிக்கப்பட்டுக் கபவாத சுரம் கூட ஏற்படும் ஒருவித நிலையும் தோன்றும். சுவாச கோசங்கள் பாதிக்கக்கூடிய நிலையில் அதை அடுத்துள்ள உறுப்பான இருதயமும் கூட அதனுல் பாதிக்கப்படலாம். இவ்வாறு தவிர்க்க முடியாத அளவில் சிக்கல் ஏற்படும் நிலையில் அச் சிக்கலைத் தனிப் பிணிகளாகவே கருதி மருத்துவர்

# சொல்லுவோம்! வெல்லுவோம்!!

—[பொன்னி வளவன்]—

வீரமுண்டு இங்குஇன்னும் வீழ்ச்சியுற்று மாய்வதா?
தீரமின்றி நாமும்மாள தெற்குமேலும் தேய்வதா?
ஈரமற்ற நெஞ்சினேர்கள் ஏய்க்கும்ஏய்ப்பைச் சொல்லுவோம்!
சேரசோழ பாண்டிவழிவீரர் சேர்ந்துஇன்று வெல்லுவோம்!

குன்றமுண்டு! கழனியுண்டு! குறைவிலாவ ளத்தொடு
பொன்திரண்டு குவிந்திருக்கும் பூமியுண்டு நம்மிடம்!
என்றெடுத்து எழில்வளத்தைச் சொல்லுவோம்!நம் தோள்களாம்
குன்றமுண்டு இந்தநாட்டைக் கொதித்தெழுந்து வெல்லுவோம்!

தாலமுத்தி ஞேடுநட ராசன்நல்ல அழகிரி
ஞாலம்விட்டுக் கொள்கைமீது உயிர்கொடுத்துப் போயினர்
காலம் இன்னும் எட்டியில்லை வெற்றிகாண! தோழனே!
சீலமிக்க கொள்கைதன்னைச் சொல்லுவோம்!நாம் வெல்லுவோம்!

தேனைநாடும் வண்டுபோலக் கொள்கைநாடிச் செல்கிறேம்
வானைமுட்டும் வாழ்த்தொலிக்க வாங்குவோம்;தி ராவிடம்!
ஊனமில்லை! ஊமையில்லை! உரிமைகுன்றி வாழ்வதா?
ஞானமிக்க கொள்கைதன்னைச் சொல்லுவோம் நாம்வெல்லுவோம்

தென்னகத்தில் வாடுகின்ற திராவிடநற் ரேழனே!
உன்னகத்தில் எண்ணடா!நாம் உருக்குலைந்து மாய்வதா?
பின்னடைந்த நாடுமீளப் பெரிதும்கொள்கை சொல்லுவோம்!
முன்னெழுந்து வா!விரைந்து! தோழனே!நாம் வெல்லுவோம்!!

அவற்றிற்குச் சிகிச்சை செய்வது வழக்கமாகும்.

சளிச் சுரம் பல்வேறு தொற்றுப் பிணிகளில் ஒன்று என்றும் அது ஒருவித நுண்ணிய கிருமிகளால் ஏற்படுவது என்றும் மேலே கூறினோமல்லவா? இப்பிணி அதிக பலவீனமுள்ளவர்களையும் வறுமையிலுள்ளவர்களையும் உடலில் ஊட்டச் சத்து குறைந்த நிலையிலுள்ளவர்களையுமே பெரும்பாலும் பற்றுகிறதென்று கூறலாம். இப்பிணியை எதிர்க்கும் சக்தி உள்ள உடல் நிலையைப் பெற்றிருப்பவருக்குச் சர்வ சாதாரணமாக இப் பிணி ஏற்படுவதில்லை. குளிர்காற்றில் அதிகமாக அடிபடுதல், அதிக களைப்பு, சோர்வு உள்ளவர்கள் இப்பிணியால் சுலபமாகப் பீடிக்கப் படலாம்.

ஒருவர் சளிச் சுரத்தாலும் மற்றேனைய சுரத்தாலும் பீடிக்கப்பட்டிருக்கும் நிலையில் அன்னவருக்குச் ஜீரண சக்தி குன்றியே இருப்பது இயல்பாகும். அவ்வாறான நிலையில் ஜீரணசக்திக்கு ஏற்ற அளவில் மிருதுவானதும் மிகக் குறைவானதுமான உணவுகளையே உட்கொள்வது மிகவும் நன்று. பார்லி, அரிசிக் கஞ்சி போன்ற திரவரூபமான உணவுகள் எளிதில் ஜீரணிக்கும் தன்மை வாய்ந்தவையாகும். இவ்வாறு இலகுவான உணவுகளை உட்கொள்ளாமல் கடினமானதும் பளுவானதுமான உணவுகளை உட்கொள்வதன் பயனாகச் சுரமும் மற்றேனைய சுரத்தைப் பற்றிய குணங்குறிகளும் பிணியாளருக்கு அதிகரிக்கவே செய்யும். சுரம் அதிகரிப்பதோடு ஜீரண உறுப்புகளுக்கு அதிக வேலையைக் கொடுப்பதன் பயனாகக் குடல் சம்பந்தமான கோளாறுகளும் ஏற்படலாம். வயிற்றுப் புசம், புளித்த ஏப்பம், வாந்தி முதலியவை எல்லாம் ஏற்படுவதற்கோ அல்லது அவை பிணியாளருக்கு அதிகரிப்பதற்கோ உடலுக்கும் பிணியின் தன்மைக்கும் ஏற்ற உணவுகளை பக்குவமான முறையில் உட்கொள்ளாததே காரணம் என்றும் கூறலாம்.

ஆகவே சுரம் அதிகரித்திருக்கிற நிலையிலும் இதர கெட்ட குணங்குறிகள் மிகுந்திருக்கிற நிலையிலும் உட்கொள்ளப்படும் உணவு வகைகளை நிலைமைக்கு ஏற்ற வகையில் அமைத்துக் கொள்வதன் பயனாகப் பிணியாளருக்கு ஒருவாறு துன்பமும் தொல்லையும் குறையும். அப்பிணியும் விரைவில் நீங்கி உடல் நலம் ஏற்படும் என்பதில் கிஞ்சிற்றும் சந்தேகமே இல்லை.

சளிச் சுரத்தால் சுவாச சம்பந்தமான உறுப்புகளும் ஒருவாறு பாதிக்கப்படுவதால் ஜலதோஷம், தும்மல், இருமல், சளி, தொண்டை வலி போன்ற குணங் குறிகள் ஏற்படும் என்பதை மேலே விளக்கினோமல்லவா? அவ்வாறான நிலையில் சளியையும் இருமலையும் அதிகப்படுத்தக்கூடிய சிற்சில பொருள்களையும் உட்கொள்ளாமல் இருத்தலே நன்று. மோர், தயிர், பழம் போன்றவை சளியையும், இருமலையும் அதிகரிக்கச் செய்யும் பொருள்கள் ஆகையால் அவற்றைப் பிணியாளர் தனக்குள்ள பிணியின் குணங்குறிகள் முழுவதும் சுகம் அடையும் வரை நீக்கிக்கொள்வதே நன்றாம். பிணியாளருக்குமலச்சிக்கல்ஏற்படலாம் அல்லது ஒரு சிலருக்கு ஏற்படாமலும் இருக்கலாம். மலச்சிக்கல் ஏற்படுவதாக இருந்தால் மலத்தைக் கழிப்பதற்குள்ள இலகுவான மலமிளக்கி மருந்துகளை உட்கொள்வதன் பயனாக மலச்சிக்கல் நிவர்த்தியாகும். மலச்சிக்கல் நிவர்த்தியாகாமல் இருப்பின் பிணியாளருக்கு அசீரணத் தன்மையும் உடல் வலியும், சோர்வும் சுரமும் கூட அதனால் அதிகரிக்கச் செய்யும்.

இச்சுரத்தை எளிதில் அகற்றுவதற்குள்ள சிறந்த மருந்துகள் இருக்கின்றன. ஆயினும் அம்மருந்துகளைப் பிணியாளர்கள் தாமே உட்கொண்டு சுகப்படுத்திக்கொள்வதில் சிரமமும் அபாயமும் இருக்கிறது. ஒருவருக்கேற்பட்ட பிணியின் தன்மைக்கும் உடல் நிலைமைக்கேற்பவும் ஒரு சில மருந்துகள் தேவைப்படலாம். ஆனால் அப்பிணி சிக்கலான கட்டத்திலிருக்கிற நிலையில் பல்வேறு மருந்துகளும் தேவைப்படலாம். இவ்வாறான நிலையில் சுரம் அற்பமாக இருப்பினும் மருத்துவர் ஒருவரின் உதவியாலேயே இச்சிகிச்சை பெற்றுப் பிணியை அகற்றுவதே சாலச் சிறந்தது என்போம். ஏனெனில் உடற்கூறு, உடலுறுப்புக்களின் தன்மை, பிணியைப் பற்றிய தன்மை, எம்மாதிரியான மருந்துகளை எந்தெந்த அளவில் எப்பொழுது கொடுப்பது என்பன போன்ற பல்வேறு விஷயங்கள் மருத்துவர் ஒருவருக்கே நன்கு தெரிய முடியும்.

சளிச்சுரம் போன்ற தொற்றுப் பிணி பீடித்து அதற்குச் சிகிச்சை செய்துகொண்டு சுகமாக்கிக் கொள்வதைவிட அப்பிணியால் பீடிக்கப்படாமல் முன் எச்சரிக்கையுடன் நடந்துகொள்வதே சாலச் சிறந்த முறைகளில் ஒன்று. இவ்வாறு செய்துகொள்வது வெள்ளம்வரும் முன்பே அணை போட்டுக் கொள்வதை ஒக்கும். ஏனெனில் பிணியொன்று ஏற்பட்டுவிட்டால் அப்பிணி முழுவதும் சுகமாகும் வரை துன்பமும் தொல்லையும் அனுபவித்தே தீரவேண்டும், அப் பிணியைச் சுகமாக்கிக் கொள்வதற்குப் பொருளும் பொறுமையும் வேண்டும் என்பதை எவராலும் மறுக்கமுடியாது.

சளிச்சுரம் அவ்வப்போது கொள்ளை நோய் போன்று பரவலாக ஏற்படும் தன்மை உள்ளதாயினும் அதை அதிகமாகப் பரவவிடாமல் ஒருவாறு தடுத்து நிறுத்தியும்விடலாம் என்பதில் சந்தேகமே இல்லை. இப்பிணியால் பீடிக்கப்பட்டிருக்கும் ஒருவரோடு பிணியற்ற நிலையில் உள்ள மற்றொருவர் சேராமல் இருப்பதே இப்பிணியைச் சுலபமாகத் தடுப்பதற்குள்ள சிறந்த முறைகளில் ஒன்றாகும். பிணியுற்ற நிலையிலுள்ளவரைத் தனி இடத்தில் வைத்து அன்னவருக்கான சிகிச்சையைச் செய்வது நன்று. இந்நிலையை அனுசரிக்காமல் பிணியால் பீடிக்கப்பட்டிருக்கும் ஒருவர் பிணியற்ற நிலையிலுள்ளவர்களோடு இருந்துகொண்டு நெருங்கிப் பழகுவதன் பயனாக இப்பிணி துரிதமாகப் பரவுவதற்கு வழிவகை ஏற்படுகிறது. ஒருவருக்குப் பீடிக்கப்பட்ட இப்பிணி தம்மோடு நின்றுவிடாமல் மற்றவர்களுக்கும் தொற்றும் தன்மையான நிலையில் அதற்குத் துணை புரிந்து கொண்டிருப்பது கொடிய செயல்களில் ஒன்று என்று கூடத் துணிந்து கூறுவோம். அறிந்தோ அறியாமலோ தொற்றுப் பிணியைப் பரப்பும் சூழ்நிலைமையைத் தோற்றுவிக்காமல் இருப்பது நம் மனைவரின் கடனாகும் என்றும் கூறுவோம். ஒருவர் சுகாதார செயல்களை அனுசரிக்காமல்

தொற்றுப் பிணி பரவும் சூழ்நிலையில் நடந்துகொள்வது மற்றேனைய சகோதரர்களின் உடல் நலத்திற்குக் கேடு சூழ்வதாகும் என்பதை மனதில் இருத்திக்கொண்டால் சளிச்சுரம்போன்ற பல்வேறு தொற்றுப் பிணிகளையும் மிகச் சுலபமாகத் தடுத்துவிடலாம்.

காட்டில் அலைந்து திரியும் வலியதும் கொடியதுமான புலியொன்று தப்பித்தவறி நாட்டில் புகுந்துவிட்டால் அதற்கு மக்கள் அனைவரும் பயந்து பதறி ஓடுவர். அப்புலி எந்நேரத்தில் நம்மை அடித்துக்கொல்லுமோ அல்லது அதற்கு இரையாக நேரிடுமோ என்கிற பீதியால் நாம் அனைவரும் ஒன்று கூடி அதை விரட்டி அடித்து ஒழித்துவிட்டால் ஒழிய தைரியமும் மன சாந்தியும் நிம்மதியும் முடிவாக அடையமாட்டோம் என்பது முக்காலும் உறுதி.

ஆனால் புலி எத்தகைய வலிமையும் கொடுமையும் உடையதாக இருந்தபோதிலும் அதனால் நாட்டிலுள்ள எல்லோரையும் அழித்துவிடவோ அல்லது துன்புறுத்திவிடவோ முடியாது என்பது அனுபவ உண்மை. அதற்கு ஆரம்பத்தில் ஒருசிலரே பலியானாலும் முடிவில் மக்களின் எதிர்ப்புக்கு அது உள்ளாகி இறுதியில் அது கொல்லப்பட்டே போகும் என்பது உண்மை.


ஆந்திரரும், கேரளரும், கன்னடரும்
திராவிடக் கூட்டாட்சியின் காரணத்தை அறிய
திராவிட முன்னேற்றக் கழகத்தின்
உயிரோட்டம் உலகு அறிய

# HOMELAND

(ஆங்கில வார இதழ்)

ஆசிரியர்:

## சி. என். அண்ணாதுரை

**9–6–57 முதல் ஞாயிறு தோறும்
வார ஏடாக வெளிவருகிறது**

**டபுள் கிரவுன் 1/4 அளவில்
8 பக்கங்கள் கிளேஸ் காகிதம்**

**தனி இதழ் 2-அணா—ஆண்டுச் சந்தா ரூ 7.**

விவரங்கட்கு:

நிர்வாகி, 'ஹோம்லண்ட்'
95, திருக்கச்சிநம்பித் தெரு, காஞ்சிபுரம்.


ஆனால் சளிச்சுரம் போன்ற பல்வேறு தொற்றுப் பிணிகளும் புலி போன்று உருவமுள்ளவை அல்ல. மாந்தர் உடல் எங்கணும் ஏற்படும் பல்வேறு பணிகளில் பல உருவமற்றவை, அரூபமானவை, அவை புலி போன்று கண்களுக்கே புலப்படாதவை. இவை போன்ற அரூபமான சளிச்சுரம் என்னும் தொற்று நோய் பிணித்தன்மையில் உருவெடுத்து மாந்தர் சமுதாயத்தையே வாட்டி வதைக்கும் தன்மையைப் பெற்றிருக்கிறது என்று ஒருவாறுகூறலாம். உருவமுள்ள புலியும் உருவமற்ற தொற்றுப் பிணியும் மாந்தர் சமுதாயத்திற்கு என்றும் எப்பொழுதும் விரோதிகளேயாகும். இவ்விரு விரோதிகளும் நாட்டில் புகுந்தால் மாந்தர் அனைவருக்கும் அவற்றால் தொல்லையும் துன்பமுமே விளையும்.

இத்தொற்றும் தன்மையான பிணி புலியைக்காட்டிலும் வலிமையும் கொடுமையும் மிக்கது. பயங்கர்மானது. நாடெங்குமுள்ள மக்களையெல்லாம் பீடிக்கும் தன்மை உள்ளது. ஏனெனில் புலியோ ஒரு சிலரையே பலி வாங்கும் அல்லது துன்புறுத்தும். ஆனால் இத் தொற்றுப் பிணியை உரிய காலத்தில் தடுத்து நிறுத்தாவிட்டால் அது 'காட்டுத் தீ' போன்று எங்கும் பரவி என்றும் எங்குமுள்ள எல்லோரையும் துன்புறுத்தும் தன்மை உடையதாகும். ஆகவே புலியை ஒழித்துக் கட்டுவதற்கு மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகளைக் காட்டினும் இத் தொற்றுப் பிணியை அறவே ஒழித்துக் கட்டுவதற்கு அனைவரும் துணைபுரிவது பலவாற்றானும் நன்மை பயக்கும் செயல் என்போம்.

அனைவரும் சுகாதார விதிகளின்படி வழுவாது நடந்துகொள்வதும் அவ்வப்போது சுகாதார அதிகாரிகளால் அறிவிக்கப்படும் பிணி எதிர்ப்பு முறைகளுக்கேற்ப நடந்துகொள்வதும் தொற்றுப் பிணியை அறவே தடுத்துக்கொள்வதற்குள்ள வழியாகும்.

ஆகவே, தொற்றுப்பிணி பரவாதிருக்க மேலே குறிப்பிட்டிருக்கும் சுகாதார நெறிமுறைகளுக்கேற்ப அனைவரும் நடந்துகொண்டால் நாட்டில் தற்காலிகமாகப் பரவியிருக்கும் சளிச்சுரத்தைக் பற்றிப் பீதியுற வேண்டியதில்லை. அச்சளிச் சுரத்தை நாட்டிலிருந்தே முற்றாக மிக எளிதில் ஒழித்துவிடலாம் என்பதில் கொஞ்சமும் சந்தேகமே இல்லை என்று துணிந்து கூறுவோம்.

—தமிழ் முரசு.

# கட்டுக் கதைகள்

கட்டுக்கதைகள் இல்லாத நாடுகளே இந்த உலகத்தில் இல்லை. அறிவு வளர்ச்சியடையாத பண்டைக் கால மக்கள் இயற்கைப் பொருள்களின் உண்மைத் தோற்றங்களையும், காரணங்களையும் அறியாமல் பல திறப்பட்ட கட்டுக்கதைகள் எழுதிவைத்தனர். சந்திரன், சூரியன், நக்ஷத்திரங்கள், கிரகணங்கள் முதலியவைகளைப் பற்றி நமது புராணங்கள் கூறும் கட்டுக்கதைகளை நாம் நன்கு அறிவோம்.

அவைகளைப் போன்ற கதைகள் மேனாடுகளிலும் இருந்தே வந்திருக்கின்றன.

*

சூரிய சந்திரர்களைப் பற்றி எஸ்கியுமோ ஜாதியாருக்குள் வழங்கும் ஒரு கதை வேடிக்கையாக இருப்பதுமன்றி மனோகரமாவுமிருக்கிறது.

ஒரு பெண் ஒரு விருந்துக்குச் சென்றிருந்தாளாம். விருந்துண்ட பின்னர் இரவு நள்ளிருளில் எல்லாரும் கூடியாடி விளையாடிக்கொண்டிருந்தனர். ஒரு இளைஞன் அந்நாட்டு வழக்கப்படி காதலைத் தெரிவிக்கும் பொருட்டு அப்பெண்ணின் தோளைப் பிடித்து அசைத்தானாம்.

இருட்டிலே தன்னைக் காதலித்தவன் யார் என்பதை அப்பெண்ணால் அறிந்துகொள்ள முடியவில்லை. உடனே அவள் ஒரு தந்திரம் செய்தாளாம்.

புகைபோக்கியண்டை சென்று தன் கைகளில் கரியைப் பூசிக்கொண்டு கூட்டத்தில் கலந்து தன் காதலனைக் கண்டுபிடிக்க ஆயத்தமாயிருந்தாளாம். மீண்டும் அவளது காதலன் அங்குதோன்றி அவளது தோளைப் பிடித்து அசைத்தானாம். உடனே அவள் அவனது கன்னத்தில் கரியைப் பூசிவிட்டாளாம். அப்பால் விளக்குக் கொண்டுவரப்பட்டபோது தன்னைக் காதலித்தவன் தன் தமயன் என உணர்ந்து உடல் நடுங்கி ஓட்டமெடுத்தாளாம்.

காதலுக்குக் கண்ணுண்டா? மூக்குண்டா? முறையுண்டா?

காதலனும் காதலியைத் துரத்திக்கொண்டு அவள் பின்னால் ஓடினான். காதலி அகப்படவில்லை; காதலனும் விடவில்லை; இவ்வண்ணம் இருவரும் வெகுநாள் ஓடிக்கொண்டே இருந்தனர். இறுதியில் காதலி பூமியின் எல்லையை அடைந்தாள். காதலனும் நெருங்கினான். வேறு வழியில்லை. காதலி வானமண்டலத்தில் குதித்து மறையத் தொடங்கினாள். காதலனும் அவளைப் பின்பற்றினான். வானமண்டலத்தை யடைந்ததும் காதலி சூரியன் ஆனாளாம்; காதலன் சந்திரனானாம். பின்னும் ஓட்டம் நிற்கவில்லையாம். இப்பொழுதும் சந்திரன் சூரியனைப் பின்தொடர்ந்து விரட்டிக்கொண்டே இருப்பதற்கு அவனது காதலே காரணமாம். காதலி தேய்ந்த கரிக்கு அறிகுறியாகவே இப்பொழுதும் சந்திரன் முகம் மாதம் ஒருமுறை கரிமயமாக இருக்கிறதாம். டியூட்டணிக் (Tewtonic) பாஷைகளில் சூரியனைப் பெண்ணாகவும் சந்திரனை ஆணாகவும் வழங்குவது மரபு.

பிற்காலத்தில் சில தேசத்தார் சூரியனை ஆணாகவும் சூரியனுக்கு முன் தோன்றும் உஷையைப் (விடிபொழுதை) பெண்ணாகவும் சூரியனை உஷையின் காதலனாகவும் அவன் அவளைப் பிடிக்கச் செல்வதாகவும் வழங்கியுள்ளார்கள்.

*

நக்ஷத்திரங்களைப் பற்றி கதைகளும் மிகவும் வியக்கத்தக்கவைகளாகவே இருக்கின்றன. ஆசிய தேசக் கதையொன்று பின்வருமாறு:—

சூரியனும் சந்திரனும் பெண்களே, நாம் இப்பொழுது காணும் நக்ஷத்திரங்கள் எல்லாம் சந்திரனின் குழந்தைகள். சூரியனுக்கும் ஒரு காலத்திலே ஏராளமான குழந்தைகள் இருந்தன. சூரியன், சந்திரன் அவற்றின் குழந்தைகள முதலியவைகளின் ஒளியை உலகமக்கள் தாங்க மாட்டார்கள் எனப்பயந்து தம் மக்களைக் கொன்றுவிடுவதென்று சூரியனும் சந்திரனும் தீர்மானித்தன. ஒப்பந்தப்படி சூரியன் தன் குழந்தைகளையெல்லாம விழுங்கிவிட்டான். சந்திரன் தந்திரசாலி—தன் குழந்தைகளை விழுங்கவில்லை. சூரியன் தன் குழந்தைகளை விழுங்கு மட்டும், சந்திரன் தன் குழந்தைகளை வான மண்டலத்திலே ஒளித்து வைத்திருந்ததாம்.

சூரியன் தன் குழந்தைகளையெல்லாம் விழுங்கிய பிறகு சந்திரன் தன் குழந்தைகளை அழைத்ததாம். சந்திரனுடைய குழந்தைகளைக் கண்டதும் சூரியனுக்கு அடங்காக் கோபம் வந்துவிட்டது. உடனே சந்திரனைக் கொல்லும்படி சூரியன் பாய்ந்தது. சந்திரன் ஓட்டம் பிடித்தது, இரண்டும் நெடுநாள் ஓடின. சில சமயங்களில் சூரியன் சந்திரனை நெருங்கிவிடுமாம். அப்பொழுதுதான் கிரகணம் உண்டாகிறதாம்.

அதிகாலையில் சூரியன் தன் குழந்தைகளான நக்ஷத்திரங்களை விழுங்குவதை நாம் எல்லோரும் பார்க்கிறோம். சந்திரனோ தன் குழந்தைகளான நக்ஷத்திரங்களை பகற்பொழுதில் ஒளித்து வைக்கிறது; இரவு சூரியன் வெகுதூரத்தில் இருக்கையில் தன் குழந்தைகளை வெளியில் கொண்டு வருகிறது.

*

சூரிய சந்திர கிரகணங்கள் எல்லா நாடுகளிலும் மிகவும் பயங்கரமான உற்பாதங்களாகவே கருதப்படுகின்றன. கிரகணங்கள் உண்டாவதற்கு பேய் பிசாசுகளும் பூதங்களுமே காரணமென்று பல இடங்களில் நம்பப்படுகின்றது.

சூரியனையும் சந்திரனையும் விழுங்க முயலும் பூதங்களினாலே சூரிய சந்திர கிரகணங்கள் தோன்றுவதாக சீனர்கள் நம்புகின்றனர். எனவே கிரகண காலத்துப் பூதங்களை விரட்டியோட்டும்பொருட்டுத் தப்பட்டைகளையும் கொப்பறைகளையும் அடித்துச் சப்தமுண்டாக்குவார்களாம். இந்தியாவிலும் கிரகண காலங்களில் மணியடிப்பதுண்டு.

பெரிய நாய்கள் சந்திரனை விரட்டுவதினாலேயே சந்திர கிரகணம் உண்டாவதாக அமெரிக்க சுதேசிகள் நம்புகிறார்கள்: வெண்ணிலா சிவப்பாகும்வரை நாய்கள் சந்திரனை விரட்டுமாம். நாய்கள் கடித்த காயங்களிலிருந்து இரத்தம் வடிவதனாலேயே விடியற்காலையில் வான மண்டலத்தில் சிவப்பு வர்ணம் தோன்றுகிறதாம்.

அறிவுவிளக்கம் பெற்று நாகரிகமடையாத தேசங்களில் எல்லாம் இவைபோன்ற குருட்டு நம்பிக்கைகளும் கட்டுக்கதைகளும் இருந்தே வந்திருக்கின்றன விஞ்ஞான அறிவு விருத்தியடைய் அடையக் கட்டுக்கதைகளும் குருட்டு நம்பிக்கைகளும் ஒழிந்து விடுகின்றன!

# அளகேசன் ஆனாலும்!!

"ஊருக்கு உபதேசம் செய்வதைப் போல நாமும் நடந்துகாட்ட வேண்டும். அப்போதுதான் மக்கள் மன்றத்தில் நம்மைப்பற்றி நல்ல அபிப்பிராயம் ஏற்பட முடியும். ஏழை பங்காளர்கள்தான்! ஏழைகளுக்காகப் பாடுபவர்கள்தான் — என்று நம்மைப்பற்றி, இப்போது மக்கள் கருதவில்லை. காங்கிரஸ்காரர்கள் என்ருலே, கதரைப் போட்டுக்கொண்டு பதவி வேட்டையிலிறங்கி, கொழுத்த பணம் சம்பாதிப்போர் என்றே எல்லோரும் எண்ணுகிருர்கள்; இதுமாற, நாம், உதாரணமாக அமைய வேண்டும்! சோஷியலிசம், சோஷியலிசம் என்று பேசிவிட்டு நாம் மட்டும் கொள்ளைச் சம்பளம் வாங்கிஞல், என்ன அர்த்தம்." — என்று எதிர்க்கட்சிக்காரல்ல, காங்கிரஸ்காரர் முழக்கமிட்டிருக்கிருர்! புது டெல்லியிலே ஜூன் 3ந்தேதி கூடிய அகில இந்திய காங்கிரஸ் கமிட்டியிலே, இவ்விதம் கர்ஜனை எழுப்பியவர், நேருவின் சொந்த மாகாணமான ஐக்கிய மாகிலத்தைச் சேர்ந்த பனர்சிதாஸ் என்பவர்! அவரை ஆதரித்து, அகில இந்திய காங்கிரஸ் கமிட்டியிலே, இரண்டொருவரே, மனம் விட்டுப் பேசியிருக்கின்றனர். சர்வூஜ்சர்மா என்பார், "அந்தோ! நண்பர்களே, நமது வழிகாட்டி, காந்தியடிகள், எத்தனை தடவைகள் குறைந்த சம்பளம் வாங்க வேண்டுமென்று வலியுறுத்திஞர். நாமே, எந்த அதிகாரியும் ரூ. 500க்கு மேல் சம்பளம் வாங்கக் கூடாது என்று சுயராஜ்யப் போராட்டத்தின்போது தீர்மானம் போட்டோமே. ஞாபகமில்லையா?" என்று வேதனையோடு எடுத்துரைத்திருக்கிருர்! இவர்கள், இவ்வாறு பேசியது மட்டுமல்ல, "காங்கிரஸ் மந்திரிகள் தமது சம்சம்பளத்தைக் குறைத்துக் கொள்ள வேண்டும்" என்று அ. இ. கா. க.வுக்குத் தீர்மானம் ஒன்று கொண்டுவரப்பட்டது! இந்தத் தீர்மானத்தை ஆதரிப்பதற்குப் பதில், விளக்கமும் வேண்டுகோளும் அளித்துப் பேசியது யார் தெரியுமா? நேருபண்டிதர்! அதிகச் சம்பளம் தேவைப்படுவதன் அவசியத்தை எடுத்து விளக்கி, தான் மாதம் பெறும் தொகையையும் அதைக்கொண்டு செய்யும் செலவுகளையும் விபரமாகச் சொல்லி, வாதாடியிருக்கிருர். தீர்மானம் கொண்டு வந்தவர், வற்புறுத்தவே, ஓட்டும் எடுக்கப்பட்டிருக்கிறது. அதிகச் சம்பளம் கூடாது என்கிற தீர்மானத்துக்கு

**அரங்கண்ணல்**

32-வோட்டுகளும், அதிகச் சம்பளம் வேண்டும் என்று 38-ஓட்டுகளும் கிடைத்து, தீர்மானம் தோற்றுவிட்டது! காங்கிரஸ் கமிட்டியில், இப்படியொரு தீர்மானம் வந்து, அது தோற்றுவிட்டது!—நேரு அவர்களது கடாட்சம் இல்லாதிருந்தும் 32-வோட்டுகள் தீர்மானத்துக்குக் கிடைத்திருக்கின்றன. ஆறே ஆறு வோட்டுகளில்தான் தீர்மானம் தோற்றிருக்கிறது! இதைக் கூர்ந்து கவனிப்போருக்கு, காங்கிரஸ் வட்டாரத்திலேயே. மந்திரிகளும் ஏனையோரும் வாங்கும் சம்பளம் பற்றி எவ்வளவு அதிருப்தியிருக்கிறது என்று விளங்கும்.

*

மந்திரிகளாயிருப்போருக்கு இப்போது தரப்படும் சம்பளம், ஏனைய நாடுகளுடன் ஒப்பிடும்போது குறைவாகும் என்று கூறி வாதாடியிருக்கிருர், நேரு பண்டிதர்! குறைவாம், இத்தொகை! எனவே, இதில் எதுவும் குறைத்துக்கொள்வதற்கில்லை என்று காரசாரமாக எடுத்துரைத்திருக்கிருர். ஆனல், இதோ கேரளம் கண்முன் தெரிகிறது. ஆளுவோர் காங்கிரஸ்காரர்களல்ல! கம்யூனிஸ்டுகள்!! அங்கு சம்பளம் 1500-அல்ல; ரூ 500 ஆகக் குறைத்துக் கொண்டிருக்கிருர்கள் — சிலர் ரூ 350-போதும் என்றும் தெரிவித்திருப்பதாகக் கூறப்படுகிறது. இவர்களும், ஏனையோரைப்போல அமைச்சர்கள் தான்! ஒரு காமராஜருக்கும், டாக்டர் ராய்க்கும், சாவனுக்கும், என்னென்ன செலவுகளிருக்குமோ அந்தளவுக்கு தோழர் நம்பூதிரிபாட்டுக்கும் நிச்சயம் இருக்கவே இருக்கிறது எனினும், இவர்கள் மாதம் ரூ 500 ஆல் எல்லாவற்றையும் கவனித்துக்கொள்ளலாம் என்று இருக்கிருர்கள்! ஆனல், நேரு பண்டிதர், காங்கிரஸ் அமைச்சர்களுக்கு இயலாதென்கிருர்! நம்பூதிரிபாட்டுக்கு இருப்பது ஒரு வாய் காமராஜுக்கு நான்கு வாய்களன்ருே உள்ளன என்று கூற முடியாது. எல்லோரும் அந்தஸ்தையும் கவுரவத்தையும் காப்பாற்றிக்கொள்ளவேண்டியவர்கள் தான்! இருந்தும் கம்யூனிஸ்டுகள் 500போதும்என்கிருர்கள்; அதைக் கொண்டு சகல செலவுகளையும்

கவனித்துக் கொள்ளலாம் என்று நம்புகிறார்கள்; நடைமுறையில் செய்தும் காட்டுகிறார்கள். நேரு பண்டிதரோ, காங்கிரஸ்காரர்களுக்கு வக்கீலாகிறார்! வாதாடுகிறார் அதிகச் சம்பளம் வேண்டுமென்று! வெள்ளையர்கள் வசம் நாடு இருந்த காலத்தில் அவர்கள் மீது நேரு போன்ற சுதந்திர வீரர்களால் வீசப்பட்ட முக்கியமான குற்றச்சாட்டுகளில் ஒன்று:

**கொள்ளைச் சம்பளம் வாங்குகிறார்கள்,**

என்பது இதைப் பார்லிமெண்டில் ஒருபஞ்சாப் உறுப்பினர், எடுத்து காட்டிப் பேசியிருக்கிறார். "சத்திய மூர்த்தி செய்த முழக்கம் எங்கே போயிற்று? ஒவ்வொரு தடவையும் எழுப்புவாரே கண்டனம்! எங்கள் இரத்தத்தைச் சம்பளமாக வாங்கிக் கொழுக்கும், ஏ, வெள்ளை அதிகார வர்க்கமே— என்று பேசுவாரே! அதை, நீங்கள் மறந்துவிட்டீர்களா?" என்று சுட்டிக் காட்டியிருக்கிறார். சத்தியமூர்த்தி போன்றார், வெள்ளையர் மீது, குற்றம் சாட்டிப் பேசிய போது, **ஏனிந்தக் கவர்னர்கள்?** — என்று கேட்டனர். அவர்களுக்காகச் செய்யப்படும் செலவு, அவர்கள் தம் ஆடம்பரப் பவனி, முதலியவைகளை கல்லும் கரையும்படி எடுத்துரைப்பார். இன்று சத்தியமூர்த்தியில்லை! ஆனால் அவரது காங்கிரஸ் சகாக்கள் இருக்கின்றனர்! ஆனால், என்ன நடைபெறுகிறது? எந்த வெள்ளைக்காரன் காலத்தில், கூடாது என்று கூறப்பட்டதோ,

**அந்தக் கவர்னர்கள் இருக்கிறார்கள்.**

**அதே, ஆடம்பரம், சம்பளம், பவனி, எதுவும் குறையாத நிலையில் கொலு இருக்கிறார்கள்.**

ஆண்டொன்றுக்கு பத்து லட்சத்துக்கு மேல், இந்த கவர்னர்களுக்காகப் பணம் பழாகிறது! **இது ஏன்?** — என்று தி. மு. க. கேட்டு வருகிறது, இதோ, பார்லிமெண்டில் கேட்கிறார், ஒருவர்.

**"ஏனிந்தக்கவர்னர்கள்? அவர்களுக்குப் பெரிய ராஜாதி ராஜர்களைப்போல அரண்மனைகள் எதற்கு? அதைக் கட்டிக்காக்கவும், ஏவல் புரியவும், ஏராளமான சம்பளத்தில் ஆட்கள் எதற்கு? இந்தப் பதவியால் என்ன பிரயோசனம் இருக்கிறது நாட்டுக்கு?"**

கேட்பவர் சத்யமூர்த்திகாலத்திலும் காங்கிரசிலிருந்தவர்! ஆனால் இப்போது காங்கிரசைவிட்டு வெளியேறியவர்! எனினும், அப்போது தந்த உறுதி மொழிகளைக் கவனமூட்டி, கேட்கிறார். வேறு யாருமல்ல, **கிருபளானி**தான் இவ்வண்ணம் கேட்பவர். இன்று தேபர் வீற்றிருக்கும் பீடத்தில், வீற்றிருந்தவர் கிருபளானி! அவர், கேட்கிறார், ஏனிந்த கவர்னர் பதவி என்று? அதற்காக இப்படி பணத்தை ஏன் வீணாக்குகிறீர்கள், என்று முழக்கம் எழுப்புகிறார், பார்லிமெண்டில்!!

*

அமைச்சர்களுக்கு அதிகச் சம்பளம்வேண்டுமென்று வாதாடுகிறார் நேரு! அதிகச் சம்பளம் மட்டுமல்ல அநாவசியச் செலவும் ஆகிறது இங்கு. ஒரு ஐந்து மந்திரிகள் இருக்கிறார்கள், ஆளுக்கு இரண்டாயிரம் ரூபாய் தர வேண்டும், என்றால் சம்பளம் அதிகமானால் கூட, மாதத்துக்கு பத்தாயிரம் ரூபாய் செலவாகும். ஆனால், அப்படியா இருக்கிறது மாநிலங்களிலும் மத்திய சர்க்காரிலும்? வெள்ளையன் காலத்தில், வைஸ்ராய் என்றொருபதவி, அநாவசியச் சம்பளம் கொட்டிக் கொடுக்கப்பட்டது அப்பதவிக்கு என்பதில் ஐயமில்லை. ஆனால், அவர், அட்வைசரி கவுன்சில் என்கிறபேரால் ஐந்தேஐந்துபேரைக் கொண்டுதானே, இவ்வளவு பெரிய உபகண்டத்தையும்— பிரிந்துபோன **பாகிஸ்தானை**யும்— சேர்த்து ஆண்டான்! ஆனால், இப்போது நேருபிரானுக்கு, ஆட்சியை நடாத்த எத்தனை மந்திரிகள் தேவைப்படுகிறார்கள்? குறைந்தது மூன்று டஜன் ஆசாமிகளாவது, மந்திரி, துணை மந்திரி, பார்லிமெண்டரி காரியதரிசி என்கிற பெயரில் இருக்கிறார்கள்! ஒவ்வொருவருக்கும் சம்பளம் கொட்டியளக்கப்படுகிறது!! அதிகச் செலவுமட்டுமல்ல, அநாவசிய செலவும் அன்றோ நடக்கிறது. இவ்வளவு மந்திரிகளோடு ஆட்சி முடிந்து விடுகிறதா என்றால், வைஸ்ராய் என்றொருவர் இருந்தது போல, ஜனாதிபதி என்று ஒருவரும் இருக்கிறார்! அவருக்குப் பிரதானியர், பெரியதொரு வட்டாரம், சிம்லாவில்—ஐதராபாத்தில்—டில்லியில் என்று மாளிகைகள்!! அவர் பவனி கிளம்புகிறார் என்றால் அதற்காக ஆகும் செலவோ ஒவ்வொரு தடவையும், பல இலட்சங்கள்!!

**"இவ்வளவு ஆடம்பரமும், பெரிய மாளிகையும், ஜபர்தஸ்தும், தேவையில்லை! என்று சொன்னார்கள். எனினும் இருக்கிற மாளிகைகளையும், மற்ற வசதிகளையும் விட்டுவிட்டு, புதுவீடு கட்டுவதென்றால் செலவாகுமேஎன்று அப்படியே நீடித்துவிட்டோம்"** — என்று வக்கீலான நேரு அவர்கள் விளக்கியிருக்கிறார் காங்கிரஸ் கமிட்டியில்.

இந்தியாவின் குடியரசுத்தலைவருக்கு இவ்வளவு ஆடம்பரமான அரண்மனை வேண்டாம், சாதாரணமாக ஒரு மாளிகை இருந்தால் போதும் என்று சொன்னார்களாம்! யார், அவ்விதம் சொன்னது தெரியுமா? ஒருவர், இராசகோபாலாச்சாரியார்! இன்னொருவர், **மவுண்ட்பேட்டன்!** எந்த வெள்ளைக்காரன், இந்திய மக்களின் பணத்தை வீணடிக்கிறான் என்று இந்த வீராதி வீரர்கள் குற்றம் சாட்டினாரா அந்த வெள்ளைக்காரன், அறிவுரை தந்தானும் — இவ்வளவு பெரிய அரண்மனையும் ஆடம்பரமும் குடியரசுத் தலைவருக்கு வேண்டாம் என்று! அதை, ஏற்காமல் நிராகரிததுவிட்டிருக்கிறார், நேரு! புது வீடு கட்ட செலவாகும் என்பதாலும், இருக்கிற மாளிகையை

---

டில்லி, நிதி இலாகா, புதுவரிகள் விதிப்பு குறித்து வெளியிட்டுள்ள ஒரு அறிக்கையில், இரண்டே இரு காரணங்களால்தான் இப்படி செய்ய நேரிட்டது என்று தெரிவிக்கிறது:

**1. இரண்டாவது ஐந்தாண்டு திட்டம்.**

**2. இராணுவச் செலவு அதிகரிப்பு.**

புது வரிகள் மூலம் கிடைக்கும் ரூ. 78 கோடியில், ரூ. 50 கோடி இராணுவத்துக்குப் போய்விடும்! ஏனெனில், கடந்த ஆண்டினைவிட இந்த ஆண்டு ரூ. 50 கோடி இராணுவச் செலவு அதிகமாக்கப்பட்டிருக்கிறது, 'பஞ்சசீலம்' பாடுகிறவர்களால்!!

என்ன செய்வது என்கிற கவலையாலுமே, அதை ஏற்கவில்லையாம். ஏதோ, அந்த மாளிகையில் 'ஜனாதிபதி' இருக்காவிடில் பாழடைந்து போய்விடும் எனும் கருத்தில் பேசியிருக்கிறார் நேரு.

புது வீடுகள், பல கட்டப்படாமலுமில்லை! இருக்கின்ற அரண்மனைக்கு உபயோகம் இல்லாமலில்லை! பல இலட்சம் ரூபாய்களைக் கொட்டி பஞ்சாப் மாநிலத்துக்கு **சண்டிகார்** என்று ஒரு நகரமே உருவாக்கிக் கொடுத்திருக்கிறார்கள்—இரண்டுகோடிக்குமேல் செலவிட்டு டில்லியில் அந்நிய விருந்தாளிகளுக்கென்று **அசோகபவனம்** எனும் பெரியதொரு விடுதியமைத்துக்கொண்டிருக்கிறார்கள்! இருந்தும் நேரு அவர்கள், இந்தச்சொத்தை வாதத்தை யளிக்கிறார். சுதந்திரோதயத்துக்குப் பின்பு, எழும்பிய கட்டிடங்கள், மாடமாளிகைகள் ஆயிரமாயிரம். அவைகளில், குடியரசுத் தலைவருக்காக, ஒன்று கட்டித் தரவா இயலாது? இருக்கின்ற வைஸ்ராய் மாளிகையில் கோடி செலவிட்டு கட்டும் அந்நிய விருந்தினர் விடுதியை அமைத்தால், என்ன!!

*

ஜனாதிபதி — கவர்னர்கள்—மந்திரிகள் கூட்டம் — இவைகளுக்காகமட்டுமல்ல, இவர்களது சுற்றுப் பிரயாணங்களுக்கென்றும், வெளிநாட்டுத் தூதுவர்களுக்கென்றும் அழியும் அநாவசியச் செலவு ஏராளம். ஒவ்வொரு மாநிலங்களிலும், சட்டசபையென்று ஒன்று இருக்கும்பொழுது; இங்கிலாந்தில் **பிரபுக்கள்சபை** இருப்பது போல ஒவ்வொரு மேல்சபையிருக்கிறது. பார்லிமெண்டுக்குமேல், **ராஜ்யசபை** என்று ஒன்று. இவைகளுக்காகப் பணச் செலவுவேறு! இப்படியொருசபை தேவையில்லை, என்று இரண்டு மூன்று ஆண்டுகளுக்கு முன்பு, **ஆந்திர மாநிலமும், பம்பாய் மாகாணமும்,** தீர்மானங்கள் போட்டன. அரசியல் விதியை மாற்ற, மூன்றில் இரண்டு மெஜாரிடி வேண்டும் என்பதால், இவை நிறைவேற்றப்படவில்லை. இப்படியெல்லாம் **நிர்வாகம்** என்கிற பெயரால், சுயராஜ்ய சர்க்காரில் அழியும் பணம், ஏராளமாகும்.

78-கோடி ரூபாய்களுக்குப் புது வரிகள் போட்டாரே, கிருஷ்ணமாச்சாரியார் அவருடைய பட்ஜட்டில் **சிவில் நிர்வாகத்துக்கு** என்று ஒதுக்கப்பட்டுள்ள தொகை எவ்வளவு தெரியுமா?

## 192-கோடி ரூபாய்கள்!!

இராணுவத்துக்கு என்று 253-கோடி, நிர்வாகத்துக்கு என்று 192-கோடி, மீதிதான், மற்றச் செலவுகளுக்கு.

இப்படி நிர்வாகச் செலவு, வெள்ளையன் சென்றதுமுதல், படிப்படியாக ஏறிவந்திருக்கிறது. இதனால்தான்,

## ஒன்றுக்கு, மூன்றாக, இப்போது, அழிகிறது!

என்று, அடிக்கடி, நாட்டு நலம் விரும்பிகள் சுட்டிக்காட்டி வருகிறார்கள். கட்டும் வரிப்பணத்தில் பாதி இராணுவத்துக்கும், அதற்கு அடுத்தபடியாக நிர்வாகச் செலவுக்கும் அழுதுவிட்டால், மீதப்படும் பணத்தைக் கொண்டு என்ன செய்யமுடியும்? நன்மைகள் என்ன மலரமுடியும்!

**எப்படியாவது ஒரு பதவியைப் பெற்றுவிடவேண்டும் என்கிற ஆசை காங்கிரசுக்குள் புகுந்து குடைவதற்குள்ள காரணமே, இப்படி ஒவ்வொரு பதவியும் பணமும் படாடோபமும் அளிப்பதாக இருப்பதால்தான்!!**

இதனை உணர்ந்ததால்தான், பனார்சிதாஸ், அவ்விதம் பேசினார்—முப்பத்து இரண்டு காங்கிரஸ் கமிட்டி மெம்பர்கள் ஓட்டும் அளித்தனர்—ஆனால், நேரு வக்கீலாகி வாதாடியதால், ஆறே ஆறு ஓட்டுகளில் தீர்மானம் தோற்றுவிட்டது! ஆறே ஆறு ஓட்டுகள்—ஆனால், ஆளும் காங்கிரசார் மீது, உழைக்கும் காங்கிரசார் கொண்டுள்ள கருத்து என்ன வென்பதை, விளக்க இது போதாதா!!

"தி. மு. க-வுக்கு என்ன? ஏதாவது சொல்லிக்கொண்டேயிருக்கும்!" என்று கூறுவோர், அ. இ. கா. கமிட்டியில் நிகழ்ந்த இந்த சம்பவத்தைக் கூர்ந்து கவனிக்க வேண்டும்.

### கொள்ளைச் சம்பளம் வாங்குகிறார்கள்!!

கூறுவது, எதிர்க்கட்சிக்காரர்களல்ல காங்கிரஸ்காரர்கள். அதிலும் சாதாரண காங்கிரஸ்காரர்கள் அல்ல, இந்திய உபகண்டத்தின் தலைவிதியையே நிர்ணயிக்கக் கூடிய அளவுக்கு சக்தியும் வலிவும்கொண்ட அகில இந்திய காங்கிரஸ் கமிட்டி மெம்பர்கள்! அதாவது எல்லா விபரங்களையும் நுணுகி ஆராய்ந்து அலசக்கூடிய பக்குவம் பெற்றவர்கள்! அவர்களிடமிருந்து,

### சம்பளத்தை குறையுங்கள்!!

என்று கோரிக்கை பிறக்கிறது ஆனால் அதனை, யரார் இந்தியாவின் வழிகாட்டியென்று **கருதப்படுகிறாரோ,** அந்த நேரு அவர்கள் "முடியாது ஆகாது" என்று, வாதாடுகிறார். அவர், விருப்பம் எதுவோ அதுவே கட்டளையென்று கருதும் கமிட்டியினரோ, நேரு வாதாடியும் விடவில்லை! 32-பேர், வோட்டளித்திருக்கின்றனர்!!

*

அகில இந்திய காங்கிரஸ் கமிட்டியில், இத் தீர்மானம் தோல்வியுற்றுவிட்டது. நேரு அவர்கள், இப்படி அநாவசியமாக அழியும் செலவு குறித்து, கொண்டிருக்கும் கருத்து இன்னதென்று விளங்கிவிட்டது. எனவே நிர்வாகச் செலவை, இந்தக் காங்கிரஸ் ஆட்சி குறைக்கும் என்கிற நம்பிக்கைக்கு இனி இடமில்லை. நாம் செலுத்தும் வரிப்பணம், கரியாகவே செய்யும்! தமிழில் ஒரு பழமொழி உண்டு, "அளகேசன் ஆனாலும் அளவறிந்து செலவிட வேண்டும்" என்று. அதாவது செல்வத்தில் சிறந்தவன் என்று கூறுகிறார்களே அந்தக் குபேரனாகயிருந்தாலும், அளவறிந்து செலவு செய்தால்தான், உருப்படலாம் எனும் கருத்தில். இந்திய உபகண்டம், புராணம் கூறுகிற குபேரபுரியல்ல ! கும்பிகொதிப்போர் வாழுமிடம்! இங்கே, இந்நிலை? இப்படிப் பணச் செலவு! அதைக் குறைத்துக் கொள்ளும் உள்ளமும் வரவில்லை!

இந்நிலையில் "கொட்டு ! கொட்டு!!" என்று புதிய புதிய வரிகளைப் போட்டுக் கொட்டுகின்றனர், மக்களை, "நியாயம் தானா, ஐயா!" என்று கேட்டால், "நீசனே! நீ என்ன அறிவாய், எமது ஐந்தாண்டுத் திட்டம் பற்றி" என்று ஏசுகிறார்கள். இப்போது, சம்பளத்தைக் குறைத்துக்கொள்ள வேண்டும் என்று கோரியது நாமல்ல! காங்கிரஸ் முன்னோடிகள்! இருந்தும் பலன், பெரிய பூஜ்யம்தான்.

★

# ★ ஆட்சி அழகு! ★

தன் மீது வைக்கப்பட்ட சுமைகளில் ஒன்றிரண்டை எடுத்துவிட்டால், பளு குறைந்துவிட்டதென்று ஒட்டகம் கருதிக் கொள்ளுமாம்! அந்தச் சுபாவம் மக்களுக்கும் ஏற்படும் எனும் கருத்தில் டில்லி பீடம், தான் விதித்த வரிகளில் ஒரு சிலவற்றை, ரத்து செய்திருக்கிறது, "இந்த வரிகள் ஒன்றும் பிரமாதமானவையல்ல. எதிர்க் கட்சிகள் வழக்கம்போல, அதிகப்படுத்திப் பேசுகின்றன" என்று ஓங்காரக் கூச்சல் எழுப்பிய உயர்திருவாளர்கள்கூட, டில்லியின் நேரங்கடந்த புத்திசாலித்தனம் குறித்து ஆனந்தப்பள்ளு பாடுகின்றனர். அவர்கள் தெளிவுபெற அல்ல; மக்கள் மன்றம் உணர, சில புள்ளிவிபரங்களை நமது பொதுச்செயலாளர் நாவலர் **நெடுஞ்செழியன்** அளிக்கிறார்:—

"வெள்ளைக்காரன்வெளியேறியவுடன் 1948-ம் ஆண்டுவரையில் உள்ள் கணக்கையும், 1957-ம் ஆண்டுவரையில் உள்ள இந்தக் 'காருண்ய'மிகுந்தவர்களின் ஒன்பது ஆண்டுகள் கணக்கையும் நீங்கள் கணித்துப் பார்த்தால் இவர்கள் அடிக்கும் கொள்ளையின் அளவு தெரியவரும்."

"வெள்ளைக்கார ஏகாதிபத்திய வெறியன் ஆண்டுவிட்டுச் சென்ற காலத்தில் பெட்ரோல் மூலமாக வாங்கப்பட்ட வரி 1-கோடியே 41-இலட்சம் ரூபாய்!"

"1957-வரி போட்ட பிறகு இவர்கள் எதிர்பார்க்கிற பணம் பெட்ரோல் மூலம் மட்டும், 32-கோடியே 6-இலட்ச ரூபாய்."

*

"மண்ணெண்ணெய் மூலம் அவன் விட்டுச் சென்ற காலத்தில் வாங்கப்பட்ட வரி ரூ. 20-இலட்சம்."

"இந்தக் காருண்யமிக்கவர்கள் வந்த பிறகுவாங்கப்பட்டது வரிமூலம் 2கோடியே 75-இலட்சம் ரூபாய் — சென்ற ஆண்டு கணக்குப்படி! இப்பொழுது மண்ணெண்ணெய் வரி இல்லை என்று சொல்லிவிட்டார்கள்; ஆனால் அடுத்த ஆண்டு வரக்கூடும்!"

*

"சர்க்கரைக்கு 1948-வாங்கப்பட்ட வரி 6-கோடியே 47-இலட்சம் ரூபாய் — இப்பொழுது இவர்கள் ஆட்சியில் 36-கோடியே 45-இலட்ச ரூபாய்!"

*

"தீப்பெட்டிக்கு வாங்கப்பட்ட வரி 7-கோடியே 31-இலட்சம் ரூபாய் — இப்பொழுது ரூ. 15-கோடி!"

*

"1948-ல் புகையிலை வரி 25-கோடியே 46-இலட்சம் ரூபாய் — இப்பொழுது 40-கோடியே 50-இலட்சம் ரூபாய்."

*

"தாவர எண்ணெய்கள் வரி 1948-ல் 1-கோடியே 96-இலட்சம் ரூபாய் — இப்பொழுது 4-கோடியே 50-இலட்சம் ரூபாய்"

*

"காபி கொட்டை வரி 1948-ல் 49-இலட்சம் ரூபாய்--இப்பொழுது 1-கோடியே 85-இலட்ச ரூபாய்."

*

"தேயிலை மூலம் வாங்கப்பட்ட வரி 3-கோடியே 66-இலட்சம் ரூபாய் — இப்பொழுது 5-கோடியே 97-இட்சம் ரூபாய்!

*

"பருத்தித் துணி இன்றியமையாதது; உணவு இல்லாமல்கூட இருக்கலாம்— உடையில்லாமல் இருக்க முடியாது. இந்தப் பருத்தித் துணியைப் பொறுத்த வரையிலும் 1948-ல் வாங்கப்பட்ட வரிகள் வெறும் 87-இலட்சம்தான்—இப்பொழுது இவர்கள் ஆட்சிபீடமேறிய பிறகு 72-கோடி ரூபாய்."

**"எவ்வளவு நல்ல சர்க்கார்!"**

★

காஞ்சீபுரம் [illegible] திருக்கச்சிநம்பி தெரு 'திராவிடநாடு' அச்சகத்தில்